www.padippakam.com

ஏப்ரல் 1999 ★ விலை ரூ.5

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2030 பெரியாராண்டு 120

## பேரறிவர் – பாவேந்தர்
## கொள்கை காப்போம்!





## ★ இந்திய அரசு – தமிழக அரசு
## வரவு செலவுத் திட்டம்

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...

**தலையங்கம்**

★ இந்திய அரசு - தமிழக அரசு வரவு செலவுத் திட்டம் — வே.ஆனைமுத்து

**கட்டுரைகள்**

★ கல்லான மரம் பேரா. மு.க. சுப்பிரமணியம்

★ தந்தைக்குப் பிறகுதான் தாயா? — க. முகிலன்

★ கல்வி - தாய்மொழி வழிக் கல்வி — வே. ஆனைமுத்து

★ இந்துக்களுக்கு முறையான ஆண்டுக்கணக்கு உண்டா? — வாலாசா வல்லவன்

★ பார்ப்பனரின் வலிமை — து. தில்லைவனம்

★ களப்பணி — சங்கமித்ரா

**கவிதைகள்**

★ புரட்சியினை வழிநடத்தும் கொள்கை — தமிழேந்தி

★ அந்த விடியலில்தான் — ப.ம. அதியமான்

★ தனிமனிதன் நல்லவன் — நாஞ்சில் ஆ. ஆரிது

★ கடவுள் என்பதும் கர்த்தனென்பதும் — த. வேணுகோபால்

★ போதும் உன் திருவிளையாடல்! — இசையமுது

## 'சிந்தனையாளன்'

### முதன்மையான அறிவிப்பு

1999 மே இதழ் முதல் தொடங்கி

1. "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" தொகுப்பிலிருந்து - பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் பேச்சு அல்லது கட்டுரை.
2. குத்தூசி சா. குருசாமி அவர்களின் 'பல சரக்கு மூட்டை' - குத்தூசி தொகுப்பிலிருந்து ஒரு கட்டுரை தொடர்ந்து வெளிவரும்.

— ஆசிரியர்

படிப்பகம்



## தமிழர்களே! படியுங்கள்!!

## தேச பக்தன்

(தமிழீழத் தேசபக்த முன்னணியினர் கழக ஏடு)

முகவரி:

A. SHOBA DOSS
64, PARK WOOD, VILLEGE DT.
NO: 308 DONMILLS
ON TARIO M 34 2 X 4
CANADA.

ஆண்டுக் கட்டணம் - US $ 10


## தாய்த் தமிழ்ப் பள்ளிக்கு உதவுவோம்!

அம்பத்தூரில் உள்ள தாய்த் தமிழ்ப் பள்ளிக்கு கணேசராம் அவர்கள் தினமணி பொங்கல் மலர் கண்டு தனக்குக் கிடைத்த ஊக்கத் தொகையை அளித்த செய்தியைக் கண்டு வியந்தோம். அம்பத்தூரிலேயே இருந்து கொண்டு தமிழர்களான நாம் எதுவும் இப் பள்ளிக்குச் செய்யவில்லையே என் றெண்ணி வருத்தப்பட்டேன். நண்பர்கள் அனைவரிடமும் சிந்தனையாளன் இதழைக் காண்பித்தேன். விரைவில் இப் பள்ளிக்கு எங்களால் இயன்ற உதவியைச் செய்கிறோம்.

அம்பத்தூர்
2.2.99

வே. மோகன்ராம்

அம்பத்தூர் தாய்த் தமிழ்ப் பள்ளிக்கு அனைவரும் உதவுங்கள்.

— ஆசிரியர்



## சிந்தனையாளன்

(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 5 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 |
| 3 ஆண்டுகளுக்கு | ரூ.150 |
| 5 ஆண்டுகளுக்கு | ரூ.200 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.500 |

இன்றே சந்தா செலுத்துங்கள்
ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்.

பணம், டி.டி. அனுப்பிட:

**சிந்தனையாளன்**
**SINTHANAIYALAN**
19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம்,
சென்னை - 5. தொலைபேசி : 852 28 62

www.padippakam.com

## சமதர்மக் காவலர்கள்



மார்க்சு லெனின் சிங்காரவேலர் பெரியார்

## சமூகநீதிக் காவலர்கள்



புலே பெரியார் அம்பேத்கர் லோகியா

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப் பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

# சிந்தனையாளன்

சுவடி : 21 மாத இதழ் ஏடு : 8

### கொள்கை முழக்கம்:

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்!
— மார்க்ஸ்-எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!
— லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!
— பெரியார்

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**

வே. ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
புலவர் அஞ்சான்
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

சென்னை ஏப்ரல் 1999
விலை ரூ.5/-

## இந்திய அரசு - தமிழக அரசு வரவு செலவுத் திட்டங்கள்

ஒரு மக்கள் நாயக அரசு ஆண்டுதோறும் செய்யப்போகும் செயல் திட்டங்களையும், அத்திட்டங்களுக்குச் செலவிடப் போகும் செலவு விவரங்களையும், செலவுக்குக் கிடைக்கப் போகிற வருவாய் இனங்களையும் தோராயமாகக் குறிப்பிட்டுச் சொல்லுகிறது. அதற்குப் பெயர்தான் அரசு வரவு - செலவுத் திட்டம்.

இந்திய அரசு, 1999-2000 நிதி ஆண்டில் செலவிடப் போகும் மொத்தத் தொகை 2 இலட்சத்து 64 ஆயிரத்து 3 கோடி ரூபாய்.

இதில், வீட்டில் பாதி கிணறு என்பது போல, இராணுவச் செலவுக்காக மட்டும் ரூ.45,634 கோடி ஒதுக்கப்பட்டு விட்டது.

மாநிலங்களுக்கான மத்திய திட்ட ஒதுக்கீடுகள் வெறும் 33,000 கோடி ரூபாய் மட்டுமே. இதைப் பெறுகிற 25 மாநிலங்களிலும், 7 யூனியன் பகுதிகளிலும் எத்தனைத் திட்டங்களை நிறைவேற்றிட நிதி கிடைக்கும்? அங்கங்கே சில திட்டங்களைத் தொடங்குவதற்கு மட்டும் போதிய நிதியே கிடைக்கும்.

அதேபோல், இந்திய அரசினரால் கல்விக்கு என எந்த முதன்மையும் தரப்படவில்லை. அதிலும் தொடக்கக் கல்வி அறவே புறக்கணிக்கப்பட்டு விட்டது. பள்ளிக்கூடம் இல்லாத சிற்றூரில் - அந்தந்த ஊரைச் சார்ந்த ஒருவர் இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமாம்; அதற்குப் பிறகு அரசு ஆவன செய்யுமாம். இது ஒரு பொறுப்பற்ற திட்டம். இத்திட்டத்தை இந்திய நிதி அமைச்சர் சின்ஹா அறிவித்துள்ளார்.

இந்திய அரசு வரவு செலவுத் திட்டத்தில் ஏழைகளுக்கு உதவக்கூடிய திட்டங்கள் எதுவுமில்லை; விலைவாசியைக் குறைப்பதற்கான திட்டம் ஏதுமில்லை; புதிய வேலைவாய்ப்பை உண்டாக்குவதற்கான திட்டங்களும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



நிலமில்லாத வேளாண்மைக் கூலிகளுக்கு நிலம் அளித்திடுவதற்கான ஏற்பாடும் இல்லை.

மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி 5.8 விழுக்காடு இருப்பதாகக் கூறுவதும் ஒரு கற்பனை. அதே நேரத்தில் தொழில் மூலம் உற்பத்தி 3.5 விழுக்காடு என்பது — கடந்த பத்தாண்டுகளிலேயே மிகவும் குறைவானது. இதற்கு என்ன காரணம் என்பது நிதி அமைச்சரால் விளக்கப்படவில்லை.

மொத்தத்தில் இந்திய அரசு வரவு செலவுத் திட்டம் அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்தது போன்ற பொறுப்பற்ற ஒரு திட்டமாகும்.

1999-2000 நிதி ஆண்டுக்குத் தமிழ்நாட்டு அரசின் வரவு மதிப்பீடு 15,867.78 கோடி ரூபாய்; செலவு மதிப்பீடு 18,500.32 கோடி ரூபாய். இது பற்றாக்குறையுள்ள வரவு செலவுத் திட்டமே.

இதில் கல்விக்காக மட்டும் 4,092 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும்; எழுத்தறிவின்மையை ஒழிக்க வேண்டி "தொடக்கக் கல்வி இயக்கம்" எனத் தனியானதொரு செயல் திட்டம் தொடங்கப்படும் என்பதும் மிகவும் பாராட்டுக்கு உரியவை.

அடுத்து, ஆதித்திராவிடர் பழங்குடியினரின் நலனுக்கு ரூ.509 கோடியும்; பிற்படுத்தப்பட்டோர் - மிகப் பிற்படுத்தப்பட்டோர் துறைக்கென ரூ.150 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கல்வி, மற்றும் ஆதித்திராவிடர் பிற்படுத்தப்பட்டோர் நலன்களுக்கான ஒதுக்கீட்டில் சம்பளச் செலவே பெரும்பகுதி ஆகிவிடும். எனவே புதிதாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டவோ, புதிய பள்ளிகளைத் தொடங்கவோ முடியாத நிலை ஏற்படுவது உறுதி. பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தரும் பணியில் பொது மக்களின் பங்களிப்பை எவ்வளவு அதிகமாகப் பெற முடியுமோ அவ்வளவு அதிகமாகப் பெற்றிட அரசும், கல்வித்துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சியர்களும் மிகத் தீவிரமாக முயற்சிக்க வேண்டும். கி.பி. 2001க்குள் பள்ளியில் சேர்க்கப்படாத சிறுவர்கள் சிறுமிகள் தமிழ்நாட்டில் இல்லை என்கிற நிலையை உண்டாக்க வேண்டும். குழந்தைகள் உட்பட, இப்போது இங்கு 30 விழுக்காடு பேருக்கு எழுத்தறிவு இல்லை. இதையும் நீக்கிட ஏற்ற வகையில், அறிவொளித் திட்டம் நாணயமாகவும் உண்மையாகவும் திறமையாகவும், செயல்படுத்தப்பட வழிகாண வேண்டும். இப்போது அறிவொளித் திட்டம் ஒரு கொள்ளைத் திட்டமாகவே உள்ளது.

இதைவிட முதன்மையான நோக்கில், மழலையர் வகுப்பு முதல் எல்லா நிலைப்படிப்பும் தமிழ்வழியாகத் தரப்பட மன உறுதியோடும் புதிய வேகத்தோடும் முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். உண்மையில், இது கி.பி. 2001க்குள் நிறைவேற்றப்படுவதற்கு முதலமைச்சர் அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் மனம் வேண்டும்; முழுவிருப்பம் வேண்டும்; இவர்கள் இதை முடித்தே தீருவது எனச் சூளுரைத்து உறுதிப்பாட்டோடு முன்வர வேண்டும்.

இன்று தமிழை உயிராக மதிக்கும் முதியோரும், இளந் தலைமுறையினரும், மாணவச் செல்வங்களும் இக்கொள்கை நிறைவேற்றத்துக்கு - கட்சி பாராமல், அரசின் பின்னால் நிற்க அணியமாகி நிற்கிறார்கள். இப்படி ஓர் அரிய வாய்ப்பு உள்ளபோதே எல்லாக் கல்வியும் தமிழ்வழியில் மட்டுமே என்பதை நிறைவேற்றி, முதலமைச்சரும் கல்வி அமைச்சரும் தமிழக வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றிட முன்வரவேண்டும். மொழிச் சிறுபான்மையினரின் தாய்மொழிக் கல்வி உரிமைகளைக் காக்கிற அதே நேரத்தில் - தமிழர்கள் தமிழில் மட்டுமே எல்லாக் கல்வியும் பெறவும்; மொழிச் சிறுபான்மையரும் தமிழை ஒரு பாடமாகப் பயிலவும் இன்றே, இன்னே முதலமைச்சர் அவர்கள் வழிகாணவேண்டும்.

முதலமைச்சர் அவர்கள், 'தமிழகத்தில் மொழி சிறுபான்மயினருக்கான பள்ளிகள் தவிர, பிற பள்ளிகளில் தமிழ் மொழி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப் பட்டு வருகிறது. ஆங்கிலம், தமிழ் தவிர ஏனைய பாடங்கள் தமிழ் மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் - குறிப்பாக மழலையர் பயிலும் பள்ளிகளில் ஆங்கிலத்தில் மட்டும் கற்பிப்பதை மாற்றியமைக்க வேண்டும் என்ற கொள்கையை அரசு மேற்கொண்டுள்ளது. இனிவரும் காலங்களில் ஆங்கிலம், தமிழ் தவிர ஏனைய பாடங்களில் கணிதம், அறிவியல், சமூக இயல் ஆகிய மூன்றில் குறைந்தபட்சம் இரண்டினைத் தமிழில் கற்பிக்கும் மழலையர் பள்ளிகளுக்கு மட்டும் ஏற்பளிப்பது என்று, அரசு முடிவெடுத்துள்ளது...' எனத் தம் உரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தோல்வி மனப்பான்மை, தயக்கம் கொண்டவர்களின் தொனியில் உள்ள முடிவாகும்.

கெஞ்சி மணியம் பண்ணுவது மணியம் ஆகாது; ஆளுமையும் ஆகாது.

இதில் போதிய அதிகாரம் தமிழக அரசுக்கு உள்ளபோது, தயக்கத்துடன் கூடிய இத்தகைய அறிவிப்பை முதல்வர் அவர்கள் செய்துள்ளது பொருந்தாது; கொஞ்சமும் பொருந்தாது.

69 விழுக்காடு இடஒதுக்கீடு என்கிற சிக்கலில் தமிழக அரசினர் சிக்கிக் கிடப்பது இருக்கும் போதே, இங்குள்ள பல்கலைக் கழகங்களிலும் மற்ற கல்வி நிறுவனங்களிலும், வேலையில், ஒடுக்கப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com



எல்லா வகுப்பினர்க்கும் விகிதாசாரப் பங்கு தரப்பட உடனடியாக வழிகாண வேண்டும்; இதற்கு முன்னுரிமை தரவேண்டும். நிரப்பப்படாத - குவிந்துபோன, இழப்பு இடங்களை (Cumulative loss) நிரப்ப வேண்டும்.

முதலமைச்சர் முன்வைத்த வரவு செலவு அறிக்கையில், பத்தி 45, 46இல் கண்டுள்ள பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டங்களுக்கு, மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, கடுமையான கண்காணிப்புடன் கூடிய செயல்பாட்டுக்கும் வழிசெய்து - ஏற்கெனவே இருக்கிற பழைய பாசன வசதிகளைப் பாதுகாக்க வேண்டும்; குளங்கள், ஏரிகளில் தூர் வாருவதற்கு மிக மிக முன்னுரிமை தரவேண்டும்; கால்வாய்களையும், ஆறுகளையும் நன்கு விளங்க வேண்டும். கோடிக்கணக்கான விவசாயக் குடிமக்கள் வாழ்வு பெற இத்திட்டங்களை விரைவுபடுத்துவது மிக மிக முதன்மை. 1998ஆம் ஆண்டில் முதலமைச்சர் இவ்வகையில் எடுத்துக் கொண்ட தனி அக்கறை பொது மக்களின் மனமார்ந்த பாராட்டைப் பெற்றது நினைவு கூரத்தக்கது.

மாணவர்கள் சாதிச் சான்றிதழ், பிறந்தநாள் சான்றிதழ் பெறுவதை எளிமைப்படுத்தியமையும்; சமத்துவபுரம் திட்டம் 'பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்ட'மாகப் பெயரிடப்பட்டமையும்; சமூகச் சீர்திருத்தத்துறை ஒன்றை அமைத்திட அரசு உறுதி பூண்டுள்ளமையும் பாராட்டுக்கு உரியவை.

இப்படிப்பட்ட திட்டங்களில் பணியாளர்களாக ஆளுங்கட்சிக்காரர்கள் நிறைய இடம் பெறுவார்கள். யார் இப்பணிகளுக்கு அமர்த்தப்பட்டாலும், அந்தந்த மாவட்டத்தில் - பணியாற்றப் போகிறவர்களுக்குக் குறைந்தது 3 மாதங்களுக்குக் கட்டுப்பாடான, விரிவான கொள்கைப் பயிற்சி - வேலைத் திட்ட விளக்கப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். பயிற்சி என்பதே இல்லாமையால்தான் உண்மையான கொள்கைப் புரிதலும், கடமை உணர்ச்சியும் இல்லாமல் சம்பளத்துக்காக வேலை செய்வது என்பதோடு, கட்சிக்கு உண்மையாக இருப்பது என்பதோடு இப்பணியாளர்கள் நின்று விடுகின்றனர்.

மக்கள் நலப் பணியாளர்கள் என்பவர்களுக்கும் கட்டாயம் இத்துறைகளில் தீவிரப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள தரிசு நிலங்களில் ஓர் 25 ஆயிரம் ஏக்கரை (10 ஆயிரம் எக்டேர்) மேம்படுத்தி, ஏழை மக்களின் வாழ்வில் வளம் பெருக்க அரசு திட்டமிட்டிருப்பது நல்லது. இது எப்போது மேம்பாடு செய்யப்பட்டு, எப்போது வேளாண்மைக்குத் தரப்படும்? இது நடைமுறையில் பெருஞ் செலவில்தான் முடியும். பயனோ மிகவும் கொஞ்சமே. எனவே இதற்கு இரண்டாவது இடத்தைத் தந்துவிட்டு, நில உச்சவரம்புச் சட்டத்தைச் செம்மையாக அமல் செய்வதற்கு அவசரமான முன்னுரிமை தந்து, இச்சட்டத்திற்குக் குடிஅரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, நிலப்பிரபுக்களிடமுள்ள சொந்த மற்றும் பினாமி பெயரிலுள்ள உபரி நிலங்களைக் கைப்பற்றி, நிலமில்லாத வேளாண்மைக் கூலிகளுக்கு - 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஓர் ஏக்கர் வீதம் வழங்குவதைத் தமிழ்நாட்டு அரசினர் விரைந்து மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள 110 இலட்சம் ஆதித்திராவிடர் - பழங்குடி மக்கள் 20 இலட்சம் குடும்பங்களாக இருக்கின்றனர். இவர்களில் சரிபாதிக் குடும்பங்களுக்கு - அதிலும் சக்கிலியர், பறையர், புதிரை வண்ணார் போன்றவர்களில் பெரும்பாலோருக்கு ஒரு செண்டு நிலம் கூட இல்லை.

1961இல் தொடங்கி 1991 வரையில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்ட நில உச்சவரம்புச் சட்டங்கள் நடப்புக்கு வராமல் இருப்பதற்கு, 38 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த காங்கிரஸ் - தி.மு.க. - அ.இ.அ.தி. மு.க. கட்சிகளின் தலைவர்களே முழுப் பொறுப்பேற்க வேண்டும். பொருளாதாரச் சுதந்தரம் கிடைப்பது சாதி - தீண்டாமை ஒழிப்புக்கும், சமத்துவம் வந்து சேரவும் ஒரு கட்டாயத் தேவை. சோற்றுக்கு வழி இல்லாதவனிடம் போய் மானம் - பகுத்தறிவு - சமத்துவம், சமூகசீர்திருத்தம் பற்றிப் பேசுவது அவனையும் தன்னையும் ஏமாற்றிக் கொண்டு, ஊராரையும் ஏமாற்றுவதே ஆகும்.

தமிழ்நாடு கூட்டுறவுத் துறைக்கு அலுவலர்கள் தேர்வு செய்வது; கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் அமர்த்துவது இவற்றிலும் - இடைநிலை ஆசிரியர்கள் அமர்த்தத்தில் மிக நேர்மையாகச் செய்தது போன்றே, பதிவு மூப்பு அடிப்படையில் பணி அமர்த்தம் நடைபெற ஆவன செய்ய முதலமைச்சர் முன்வர வேண்டும்.

மேலும், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் - பகற்கொள்ளை அடிப்பதற்கென்றே, நூற்றுக்கணக்கில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைத் தொடங்க அன்றைய அரசு அனுமதித்தது. அப்படி அரசு அனுமதித்ததும் அன்றி, 15000 பேர் முதலாமாண்டில் ஆசிரியர் பயிற்சி முடித்து, அரசுத் தேர்வு எழுதவும் அரசு அனுமதித்தது. இந்த 15 ஆயிரம் பேர் இரண்டாம் ஆண்டுப் பயிற்சியையும் முழுமையாக முடித்து விட்டனர். ஓர் அரசுதான் இவற்றைச் செய்தது. அ.தி.மு.க. அரசு செய்தது தவறு என்றால், அரசு செய்த அந்தத் தவற்றுக்காக, இப்போது உள்ள

படிப்பகம்

www.padippakam.com



தி.மு.க. அரசு இந்த 15 ஆயிரம் பேர் தேர்வு எழுதிடப் பொறுப்பேற்க முடியாது என்பது எப்படிச் சரியாகும்? இவர்களுக்குப் புதிதாகப் பயிற்சி தரவேண்டும் என்பது எப்படி ஞாயமாகும்? அன்றைய தமிழ்நாட்டு அரசு முதலாமாண்டில் தேர்வு பெற்றவர்களுக்குக் கொடுத்த அரசினர் சான்றிதழ் என்பது வெறுங் குப்பைக் காகிதமா?

இன்று 30-35 வயது என்று ஆகிவிட்ட இந்த 15 ஆயிரம் ஆண்களும் பெண்களும் அ.தி.மு.க. அரசு செய்த தவறுக்குப் பலியாக வேண்டுமா?

இதுபற்றியும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் தீவிரமாகச் சிந்தித்து நீதி வழங்க வேண்டும்.

எத்தனை ஆண்டுகளுக்கு நீங்கள் பதவியிலிருக்கிறீர்கள் என்பது முதன்மை ஆகாது. பதவி போனாலும் பரவாயில்லை - பதவியிலிருக்கிற காலத்திலேயே என்னென்ன சாதனைகளை, நிலையான சாதனைகளைக் குவித்தீர்கள் என்பதே முதன்மையாகும். இதுவே, தந்தை பெரியாரின் 'ஆட்சியாளர் ஆதரவுக்கு' அவர் வைத்திருந்த அளவுகோல்.

இவற்றை மனங்கொண்டு சிந்தித்துத் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள், தமிழ் - தமிழர் நலன் குறித்த மேற்கண்ட செய்திகளை ஆய்ந்து உடனடியாகச் செயல்படுத்திட முன்வர வேண்டுகிறோம்.

அத்துடன், கூடுதல் நிதி ஆதாரங்களை மய்ய அரசிடம் தட்டிக் கேட்டுப் பெற்றிடவும், தமிழ்நாட்டின் கனிம வளங்களுக்கு உரிமத் தொகையாக 40% கேட்டுப் பெற்றிடவும்; பொது அதிகாரப் பட்டியலில் 1997ல் சேர்க்கப்பட்டுவிட்ட கல்வி, பல்கலைக் கழகக் கல்வி இவற்றை மீண்டும் மாநில அரசுக்கான அதிகாரப் பட்டியலில் சேர்த்திடவும் உரிய முயற்சிகளை முதலமைச்சர் மேற்கொண்டிடக் கோருகிறோம்.

1.4.99 வே. ஆனைமுத்து





PERIYAR ERA

A MONTHLY MAGAZINE OF INTERNATIONAL STANDING

In its 5th Year of Publication

Editor-in-Chief
V. ANAIMUTHU

Kindly Subscribe

| | INDIA | MALAYSIA | OTHER COUNTRIES |
|---|---|---|---|
| ANNUAL WITH SOUVENIR | Rs.100 | RM 60 | US $ 20 |
| LIFE MEMBERSHIP | Rs.1,000 | RM 600 | US $ 200 |
| PATRON DONOR | Rs.5,000 | RM 3,000 | US $ 1,000 |

Address:
PERIYAR ERA
19, Murugappa Street, Chepauk, Chennai - 600 005. ✆ 8522862


படிப்பகம்

www.padippakam.com



எல்லோரும் படியுங்கள்

# கல்லான மரம்

பேராசிரியர் மு.க. சுப்பிரமணியம்

திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூர் உயிர்ப் படிமங்கள் நிறைய உள்ள பகுதி. படிமத்தை ஆங்கிலத்தில் பாசில் என்பர். ஒரு பொருளோ உயிரோ மாய்ந்து, மக்கிப் போய், மரபற்றுப் போய் காலமெல்லாம் கிடந்திடும் நிலையைத் தான் படிமநிலை (பாசில்) என்கிறோம்.

அரியலூர், கல்லக்குடி, காட்டுப்பிரிங்கியம், மேலப்பழூர், குன்னம், கொளக்காநத்தம், கருடமங்கலம், ஊட்டத்தூர், காரை, அணைப்பாடி, கல்லகுறிச்சி ஆகிய பகுதிகளில் கடல் நீரானது உள்ளே நுழைவதும் பின் வாங்குவதுமாக இருந்ததாம். இது இன்று நேற்றல்ல! இலட்சக் கணக்கான - ஏன்? - கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர், இப்பகுதியில் கடல் கொள்ளுதலும் பின் வாங்குதலும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. (இன்றைய வங்காளக் குடாக்கடல், பண்டைய காலத்தில் இந்திய - பசிபிக் கடலாகும்!)

இவ்வாறு கடல் உள்நுழைந்து பின்வாங்கும் போதெல்லாம் அப் பகுதியில் எவ்வளவோ உயிரினங்களை விட்டுச் சென்றன. எல்லா உயிரினங்களும் இறந்து, பல இலட்சக்கணக்கான ஆண்டுகளாக அப் பகுதியில் மக்கிப்போய்ப் படிவுகளாயின. பல்லாயிரக்கணக்கான கடல் உயிரினங்களின் கல்லறையாக அந்தப் பகுதி ஆகிவிட்டது எனலாம். பவளங்கள், ஓடுடன் கூடிய மீன்வகைகள் பல்லாயிரக்கணக்கில் இருந்தன. இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே கடற்கோளின் (கடல் ஓரிடத்தை விழுங்குதல்) காரணமாக இப் பகுதியில் அவை கணிசமான அளவிற்கு அழிவுற்ற நிலையில் விடப்பட்டன. அவையெல்லாம் இறுகிப் போய் வண்டல் படிந்த பாறைகளாக மாறிவிட்டன. இவற்றில் பெரும்பகுதி சுண்ணாம்புக்கற்கள் தாம்!

புதையுண்டு போன கடல் உயிரினங்களின் சதைப் பகுதிகளெல்லாம் அழுகி, மக்கி, மண்ணோடு மண்ணாகிப் போனாலும் அவற்றின் எலும்புகளும் ஓடுகளும் வெகுகாலத்திற்கு அப்படியே இருந்தன. அவற்றின் துவாரங்களிலும் பிளவுண்ட பகுதிகளிலும் கடல்நீர் விட்டுச் சென்ற தாதுப்பொருள்களெல்லாம் புகுந்து கொண்டன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் இவை படிமக் கற்களாக மாறிவிட்டன. தாவரங்களில் உள்ள ஒவ்வொரு கூறும், அணுத்திரளாகி சிலிகாவாக மாறிவிட்டன. சிலிகா என்பது மணலும் பளிங்கும் கலந்த ஒன்று. அப் பகுதியில் உள்ள பாறைப் பாளங்களையெல்லாம் ஆய்ந்து பார்த்தால் அவற்றின் மீதுள்ள பதிவுகள் நமக்கு வியப்பை ஊட்டுகின்றன. இலைகளின் பதிவுகளும் அவற்றின் மென்மையான கட்டுமானப் பதிவுகளும் பாறைப்பாளங்கள் மீது பத்திரமாக உள்ளன. சுண்ணாம்புப் பாறைகளில், அவற்றின் அடுக்கடுக்கான பாளங்களில் - படிந்துள்ள சுண்ணாம்புப் படிவுகளும் பாசில்களும் பார்ப்பதற்கு விநோதமாக உள்ளன. இயற்கைப் புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள பக்கங்கள் போல இவை உள்ளன எனலாம். அரியலூரின் கருவூலங்கள் இவை.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட அரியலூர் பகுதியின் பாறைக்கட்டுமான அமைப்பை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். கடற்கரைக்கு மேற்கே உள்ள பகுதியிலிருந்து கிழக்கே வரவர நான்கு பகுதிகளைக் காணலாம். உட்டத்தூர் பகுதிதான் மிகவும் பழமையானது. கிழக்குநோக்கி வரவர, அரியலூர் பகுதி, நின்னியூர்ப் பகுதி ஆகிய இவை அடுத்தடுத்து வருவன. கடலோரத்தை நெருங்க நெருங்க இவற்றின் பழைமை குறைந்து கொண்டே வருகின்றது. இப் பகுதிகளில் சுண்ணாம்புக் கற்களும், மணற்கற்களும், ஜிப்சமும், அமோனைட்டுகளும், பீலம்னைட்டுகளும் நிறைய கிடைக்கின்றன.

அரியலூர்ப் பகுதி நமக்குத் தரும் அதிசயம் தான் நீண்ட நெடிய கல்மரம். பன்னிரண்டு கோடி ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது. இதை நம்ப முடியவில்லையல்லவா? எனவே தான் இந்த நிகழ்வினை அதிசயம் என்கிறோம்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ளது சாத்தனூர், இதற்கு 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கடல் உத்வேகம் கொண்டு, அந்தக் காலகட்டத்தில் ஏறத்தாழ 10 கி.மீ. தொலைவிற்கு சாத்தனூருக்கு மேற்குத் திசையில் உட்புகுந்து விட்டது. இதுவே கடற்கோள். இக் கால கட்டத்திற்கு கிரீடேசியஸ் (சுக்காம்பாறைக் காலம்) என்று பெயர். கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, பல்வேறு வகைகளைக் கொண்ட கடல் வாழும் விலங்குகள் ஏராளமாக இருந்தன. இவை இறந்தபிறகு கடலிலேயே புதையுண்டன. கடலில் கலக்கும் ஆறுகளின் மணலுக்கடியில் இவை புதையுண்டு கிடந்தன.

இவற்றைப் போலவே கடற்கரையில் வளர்ந்து நின்ற மரங்களும் கடற்கோள் வெள்ளத்தில் சாய்ந்து

படிப்பகம்

www.padippakam.com



வெள்ளத்தோடு மோதி அடிபட்டுப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக மண்ணோடு மண்ணாகக் கிடந்து கெட்டிப்பட்டு, இறுகிக் கற்களாகி விட்டன. இதற்கு இலட்சக்கணக்கான ஆண்டுகள் பிடிக்கும். இவ்வாறு கல்லாகச் சமைந்த மரத்தையே கல்மரம் - பாசில் - என்கிறோம்.

பூத்துக் குலுங்குகின்ற தாவரங்களையே இன்று நாம் காண்கிறோம் - ஏராளமாக! ஆனால் நாம் கற்பனை செய்து பார்க்க முடியாத பண்டைய காலத்தில் இந்த பூமியில் கோனிபர்ஸ் எனும் பூக்காத தாவரங்களின் வகைகள் தாம் தோன்றியிருந்தன. சாத்தனூர்ப் பகுதியில் காணக்கிடக்கும் கல்மரமும் கோனிபர்ஸ் (கூம்பு) வகையைச் சார்ந்தது தான்.

படிமமாகிவிட்ட இந்தக் கல்மரம் மிகச் சிறந்த வரலாற்று மாதிரிச்சான்று எனலாம். சாத்தனூர்வாசிகள் பெருமை பாராட்டக்கூடிய பண்டைய அதிசயச் சான்றிது! பாசிலாகிவிட்ட இக் கல்மரத்தின் நீளம் 18 மீட்டர். இதனுடைய வேரமைப்பு, அடிமரத்தின் கணுக்கள் இவற்றையெல்லாம் பாறையில் தெளிவாகப் பார்க்கலாம். இந்தக் கல்மரம் கிடக்குமிடம் சுற்றிலும் வேலியிடப்பட்டுள்ளது. அங்கு ஓர் அதிகாரப்பூர்வமான இந்திய அரசாங்கச் செய்திப்பலகை நிறுத்தப்பட்டிருக்கிறது. இம் மரம் குறித்து எல்லாச் செய்திகளும் அப் பலகையில் எழுதப்பட்டிருக்கின்றன. அதில் ''இந்திய அரசு; இந்தியாவின் மண் உட்கூற்றியல் ஆய்வு, சாத்தனூர் தேசியப்பூங்கா, மரப்படிமம்; கிடைத்ததற்கரிய தேசியக் கருவூலம்'' என்று பொறிக்கப்பட்டுள்ளது. ''எம்.எஸ். பாலசுந்தரம், இயக்குநர், இந்திய மண் உட் கூற்றியல் ஆய்வு'' என்று குறிப்பின் அடியில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த இடம் வெறிச்சோடியிருக்கிறது. அங்கே போக வாகன வசதி கிடையாது. சொந்த வாகனத்தில் போகலாம்; இல்லாவிட்டால் நடந்தே செல்ல வேண்டும். அரியலூரிலிருந்து மேற்கே - சாத்தனூர் 16 கி.மீ. தூரம்; பேருந்தில் செல்லலாம். வழியில் இலுப்பைக்குடியில் இறங்கி 3 கி.மீ. நடந்தால், படிமமரம் வேலியிட்டுப் பாதுகாக்கப்படும் இடத்தை அடையலாம். வழி நெடுக மனித நடமாட்டம் குறைவு. வழியில் சில பறவையினங்களைப் பார்த்துக் கொண்டே களைப்பை மறந்து, கல்மரம் உள்ள இடத்தை அடையலாம். அருகில் உள்ள சிற்றூரைச் சார்ந்த ஒருவரைக் காவற்காராக நியமித்திருக்கிறார்கள். வேலியிடப்பட்ட பரப்பிற்குள்ளேயே ஒரு சிறிய அறை கட்டி வைத்திருக்கிறார்கள். தட்டுமுட்டுச் சாமான்களும், படிமத்துண்டுகளும் (சின்னதும் பெரியதுமாக) அவ்வறையில் கொட்டிக்கிடக்கின்றன. பூட்டி வைத்திருக்கிறார்கள்.

கல்மரம் உள்ள இடத்தின் வேலிக் கதவைத் திறந்து, அறையையும் திறந்து பார்த்த போது மண்ணில் நீண்டு, நெடுஞ்சாண் கிடையாகக் கிடந்த மரம் முழுதுமாகவே கல்லாகத் தான் இருந்தது. மரம் கல்லாகி விட்டது என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கல்லாகியிருந்த அம்மரத்தின் கல்வேர்ப் பகுதிகளையும் அதன் கற்களையும் வெவ்வேறு கட்டட வேலைக்காகும் எனக் கருதி, அந்தப் பகுதியில் வாழும் மக்கள் வெட்டி எடுத்துச் சென்றிருக்கிறார்கள். கிராமவாசிகள் தந்த தகவல் இது. அவர்களுக்கெல்லாம் அப்பொழுது இதன் அபூர்வத்தன்மை தெரியாது. ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துச் சொன்னபிறகு தானே இதன் பெருமை எவருக்கும் தெரிய முடியும்! எனவே, இப்போது வேரும் கிளையுமற்ற வெறும் அடிமரப் படிமம் மட்டுமே அங்கு கிடந்தது.

இந்தப் படிமத்தை, இந்திய மண் உட்கூற்றியல் கழகத்தைச் சார்ந்த டாக்டர் எம்.எஸ். கிருஷ்ணன், 1940 இல் கண்டுபிடித்த பிறகே, அதிகாரப் பூர்வமாக இந்திய அரசு அதனைப் பாதுகாக்க முன் வந்தது. 1940க்கு முன்னர் அது என்னவென்றே எவருக்கும் தெரிந்திருக்காது. வெறும் பாறைக்கல் என்று தான் நினைத்திருப்பார்கள்.

பார்வையாளர் (வருகையாளர்) குறிப்பேடு ஒன்று அங்கிருக்கிறது. மெல்போர்ன் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் கென்.ஜி. மெகன்சி என்பார், 1994 ஆம் ஆண்டு செப்டம்பர் 24ல் அங்கு வந்து, ஃபாசிலான அம்மரத்தை ஆய்ந்திருக்கிறார். அந்தக் குறிப்பேட்டில் தனது ஆய்வு முடிவினை எழுதி இருக்கிறார். படிமமான அந்த மரம் 30 ஆண்டுகள் உயிரோடிருந்து மடிந்திருக்க வேண்டும் என்கிறார் அப் பேராசிரியர்.

இக் கல்மரத்தைப் பாதுகாக்கும் பணியில் இருக்கும் காவலர், இதனை யாரும் நாசப்படுத்தாமல் பாதுகாத்து வருகிறார். அதனுடைய உடைந்து போன துண்டுகளை அறையிலே பூட்டி வைத்திருக்கிறார். எவரும் அதனை எடுத்துச் செல்லக் கூடாது என்பது அரசு உத்தரவு என்கிறார். நியாயம் தான். ஆராய்ச்சியாளருக்குப் பயன்படவேண்டுமல்லவா? ஒவ்வோர் ஆண்டும் நாடு முழுவதிலுமிருந்தும் நூற்றுக் கணக்கான ஆய்வாளர்கள், மாணவர்கள் வந்து இதனைப் பார்த்துச் செல்கின்றனர். வெளிநாட்டினரும் வந்து பார்க்கின்றனர். பார்க்கச் செல்லும் பயணிகளுக்கு ஏற்ற வகையில் சில ஏற்பாடுகளையும் வசதிகளையும் செய்து, அதனைச் சிறந்த சுற்றுலாப் பகுதியாக உயர்த்த வேண்டும். இது குறித்து மாநில அரசு யோசிப்பது நல்லது.

கடற்கோள் பகுதிக்குக் கிழக்கே சென்றால், அதாவது திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 15 கி.மீ. தொலைவில், Bad land Topography என்பதற்கு உதாரணம் போல் அழிநிலப்பகுதி ஒன்று உள்ளது. பள்ளங்களும்; செங்குத்தான முகடுகளும், மலைத் தொடர் போன்ற மண்மடிப்புகளும் பின்னிப் பின்னிக் கூராகவும் தாறுமாறாகவும் மேலேறிடும்

8ஆம் பக்கம் பார்க்க...

படிப்பகம்

www.padippakam.com



# தந்தைக்குப் பிறகுதான் தாயா?

க. முகிலன்

மார்ச் 8ஆம் நாள் பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டும் சென்னை, தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் எவ்வித விளம்பரமும் இல்லாமல், அரங்குகளில் சில பெண்கள் கூடிப் பெண்களின் பிரச்சனைகள் பற்றி விவாதித்தனர்.

1857ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் நாள் நியூயார்க் நகரில் நெசவுத் தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வந்த நூற்றுக்கணக்கான பெண்கள் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும்; மோசமான வேலைச் சூழலை மாற்றி அமைக்க வேண்டும் என்று வேலை நிறுத்தம் செய்தனர். மீண்டும் 1908 ஆம் ஆண்டு நியூயார்க் நகரில் பெண்கள் அதே கோரிக்கைகளை முன் வைத்துப் போராடினார்கள். 1910ஆம் ஆண்டு செருமனியில் கிளாரா ஜெட்கின் தலைமையில் நடைபெற்ற சோசலிசப் பெண்களின் இரண்டாவது சர்வதேசப் பெண்கள் மாநாட்டில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் நாளைப் பெண்கள் தினமாகக் கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாண்டு பெண்கள் தினமான மார்ச் 8ஆம் தேதிக்கு இருபது நாட்களுக்கு முன்னர் பிப்ரவரி 17ஆம் நாள், இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் குழந்தைக்குப் பாதுகாவலராக இருக்க வேண்டியது தந்தையா? தாயா? என்பது குறித்து ஒரு தீர்ப்பை வழங்கியது.

1984 டிசம்பர் மாதம் தில்லியைச் சார்ந்த எழுத்தாளர் கீதாவும், அவருடைய கணவர் டாக்டர் மோகனும் 9 வயதான தங்கள் மகன் பெயரில் இருபதாயிரம் ரூபாய்க்கான சேமிப்புப் பத்திரம் வாங்குவதற்காக ரிசர்வ் வங்கிக்கு விண்ணப்பித்தனர். அந்த விண்ணப்பத்தில் மகனின் பாதுகாவலராக அவனுடைய தாய் கீதா இருப்பார் என்று தெரிவித்துப் பெற்றோர் இருவரும் கையொப்பம் இட்டிருந்தனர். ஆனால் ரிசர்வ் வங்கி இவர்களின் விண்ணப்பத்தை ஏற்க மறுத்துவிட்டது. தந்தை மட்டுமே பாதுகாவலராக இருக்குமாறு மறு விண்ணப்பம் அளிக்க வேண்டும் அல்லது தாய் பாதுகாவலராக இருக்க வேண்டுமெனில், தாய் பாதுகாவலராக இருக்கலாம் என்று உரிய அதிகாரியிடம் சான்று பெற்றுத் தர வேண்டும் என்று ரிசர்வ் வங்கி கூறியது. இதை எதிர்த்து கீதாவும் மோகனும் உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கின் மீதான தீர்ப்பை பிப்ரவரி 17 அன்று உச்சநீதிமன்றம் வழங்கியது.

1956 ஆம் ஆண்டைய இந்துச்சிறார் (Minor) மற்றும் அவர்களின் பாதுகாவலர்கள் பற்றிய சட்டம் பிரிவு 6 (அ) வில் (i) "18 வயது அடையும் வரையில் இந்து மதத்தைச் சேர்ந்த குழந்தைகளின் பாதுகாவலராகத் தந்தை இருக்கலாம். தந்தைக்குப் பின் தாய் பாதுகாவலராக இருக்கலாம். (ii) ஆனால் வைப்பாட்டிக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் திருமணத்திற்கு முன்பே பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் தாய் பாதுகாவலராக இருப்பார். (iii) திருமணத்திற்குப் பின் பெண்ணுக்கு அவள் கணவர் பாதுகாவலராக இருப்பார்" என்று கூறப்பட்டுள்ளது.

குழந்தைகளின் பாதுகாவலராக இருப்பதற்குத் தந்தை மட்டுமே தகுதி உடையவர் என்றும் தந்தை இறந்த பிறகு தான் தாய் பாதுகாவலராக இருக்கலாம் என்றும் இதுவரையில் தீர்ப்புகள் அளிக்கப்பட்டு வந்துள்ளன.

ஆனால் பிப்ரவரி 17ஆம் நாள் தீர்ப்பில் மட்டும் 'தந்தைக்குப் பிறகு' என்பதற்குப் புதிய விளக்கம் தரப்பட்டுள்ளது. தந்தைக்குப் பிறகு என்பதற்கு தந்தை இறந்த பிறகு என்று மட்டுமே பொருள் கொள்ள வேண்டியதில்லை. பல காரணங்களால் தந்தை குழந்தையைக் கவனித்துக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லாதபோது, குழந்தையின் நலன் கருதி தாய் பாதுகாவலராக இருக்கலாம் என்று அத்தீர்ப்பில் புதிய விளக்கம் கூறப்பட்டுள்ளது.

இத் தீர்ப்பில்கூட தந்தையைப் போலவே தாய்க்கும் தன் குழந்தைக்குப் பாதுகாவலராக இருக்கக் கூடிய சம உரிமை உண்டு என்று கூறப்படவில்லை. குழந்தையைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய நிலையில் தந்தை இல்லாதபோது மட்டுமே தாய் பாதுகாவலராக இருக்கலாம் என்றே கூறப்பட்டுள்ளது. இது பெண்ணின் சமஉரிமையை மறுப்பதாகும்; தாயை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவதாகும். பிரிவு 6 (அ) வில் திருமண உறவுக்கு அப்பால் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும் தாய் தான் பாதுகாவலர் என்று வகுக்கப்பட்டிருப்பது ஆணாதிக்கத்தின் அடையாளமாகும். இக் குழந்தை பிறப்பதற்கு எந்த ஆண் காரணமோ அந்த ஆணுக்கும் இக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் உண்டு என்றல்லவா சட்டம் இயற்றப்பட வேண்டும்? பெண்ணை வெறும் போகப் பொருளாக மட்டுமே பார்க்கும் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணை ஏமாற்றி வஞ்சித்துத் தன் காம இச்சைக்கு இரையாக்கி விட்டு ஓடி விடுவதற்கு ஆண்களுக்குச் சட்டப்படியாக அளிக்கப்பட்டுள்ள கேடான உரிமைதானே இது!

அதே போன்று பிரிவு 6 (அ) வில் திருமணமான பெண்ணுக்கு அவள் கணவன் பாதுகாவலராக இருப்

படிப்பகம்

www.padippakam.com



பார் என்று கூறப்பட்டுள்ளது. அப்படியானால் கணவனுக்கு யார் பாதுகாவலராக இருப்பது? கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவனும் பாதுகாவலராக இருப்பார்கள் என்றல்லவா சட்டம் செய்திருக்க வேண்டும்? இந்து மதம் இவ்வாறு சட்டம் செய்ய அனுமதிக்காது. ஏனெனில் பெண் இளமையில் தந்தைக்கும் இல்வாழ்வில் கணவனுக்கும் முதுமையில் மகனுக்கும் கட்டுப்பட்டவள் என்று வகுத்துள்ள மனு தர்மத்தின் அடிப்படையில் இயற்றப்பட்ட 1956ஆம் ஆண்டைய இந்துச் சட்டத்தில் கணவனுக்கு மனைவி பாதுகாவலர் என்று ஆக்க முடியுமா?

இந்துச் சட்டத்தில் இருந்த இது போன்ற பல குறைபாடுகளைக் களைந்து அப்போது சட்ட அமைச்சராக இருந்த டாக்டர் அம்பேத்கர் புதியதாக இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவை நாடாளுமன்றத்தில் முன் மொழிந்தார். இதை நிறைவேற்ற விடாமல் இந்து வெறியரான இராசேந்திர பிரசாத் முதல் 'நாத்திகரான' நேரு வரை தடுத்தனர். இதனால் சினங் கொண்ட அம்பேத்கர் சட்ட அமைச்சர் பதவியைத் தூக்கி எறிந்தார்.

எனவே இன்றைக்கு உள்ள இந்துச் சட்டம் மனுநீதியையும் மற்ற இந்துச் சாத்திர நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதாகும். பெண்ணடிமைத் தனத்திற்கும், நால் வருண அமைப்புக்கும் இந்துச் சட்டமும், இந்திய அரசியல் சட்டமும் பாதுகாப்பாக இருக்கின்றன. இந்த அடிப்படையில் தான் இந்துக் கோயில்களில் பார்ப்பனர் மட்டுமே அர்ச்சனை செய்யத் தகுதி படைத்தவர்கள். மற்ற சாதியார்க்கு இத் தொழிலைச் செய்ய உரிமையில்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

பெண் முன்னேற்றம், பெண் விடுதலை, பெண்ணடிமை ஒழிப்பு என்று பேசுகின்றவர்கள் ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பெண்ணடிமைத் தனத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டிருப்பது மதமே! இந்து மதத்தின் ஸ்ம்ருதிகளும் ஸ்ருதிகளும், இதிகாசப் புராணங்களும் பெண்ணடிமைத்தனத்தை நிலைக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. சீதையின் கற்பைப் பற்றி எவனோ ஒருவன் இகழ்ந்தான் என்பதற்காக சீதையைத் தீயில் இறக்கினான் இராமன்! பாஞ்சாலி ஐவருக்கு மனைவி என்பதுடன் பாஞ்சாலியை பணயப் பொருளாகச் சூதாட்டத்தில் தருமன் வைத்துத் தோற்றான். இந்த இராமாயணமும் மகாபாரதமும் இந்தியா முழுவதும் பிரச்சாரம் செய்யப்படுகின்றன. இந்துமதச் சடங்குகளும் பெண்ணடிமைத்தனத்தைக் காப்பாற்றுகின்றன. எனவே இவற்றை எதிர்த்துப் போராடி ஒழிக்காமல் பெண்ணினத்திற்கு முழு விடுதலை கிடைக்காது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் எதிர்க்காமல் பேசப்படுகின்ற பெண்ணுரிமை, பெண் விடுதலை என்பது பணக்கார மேல் சாதிப் பெண்களில் சிலருக்கு மட்டுமே நன்மை தருவதாக இருக்கும்.

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டின்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.

— புரட்சிக் கவிஞர்

---

6ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஒடுங்கிய கோபுரம் போன்ற உச்சிகளும், வியப்பில் ஆழ்த்தும் வெவ்வேறு வகைத்தாய உச்சிகளும் நிரம்பிக் கிடக்கின்ற பகுதி இது. கண்கொள்ளாக் காட்சி தான். ஆனாலும் வறண்ட காட்சி!

சின்னதும் பெரிதுமான 5 முதல் 8 மீட்டர் உயரம் கொண்ட மேடுக்ளிலிருந்து, அடிக்கடி பொழியும் மழையின் காரணமாக களிமண் நிறைந்த மேல் மண்ணும் ஜிப்சமும் வழிந்தோடி விட்டன. இவ்வாறு வழித்தெறியப்பட்ட நிலை 2000 எக்டேர் பரப்புள்ள பகுதியில் தான். கடல் தொடர்பான இராசயனப் பொருள்கள் இப் பகுதியில் கிடைக்கின்றன. ஜிப்சம், பாஸ்பேடிக் நோடுல்ஸ், பேரியம் சல்பேட், பெலம்நைட், ஃபாசில்ஸ் போன்ற இரசாயனப் பொருள்கள் அவை.

இந்த மேடுகளிலிருந்தும், குன்றுகளிலிருந்தும் அடிக்கடி பெய்யும் மழை எல்லாவற்றையும் வழித்தெடுத்துவிட்டது. புல், பூண்டு, செடிகொடிகள் எதுவும் இல்லாமல், பசுமையை இழந்து, வறண்டு, மேடுகள் மொட்டையாகி நிற்கின்றன. அங்குள்ள கிராமவாசிகள் ஜிப்சத்தைத் துண்டு துண்டாகப் பெயர்த்து எடுத்துச் சென்று, அப்பகுதியில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளில் விற்றுவிடுகின்றனர். ஒழுங்காகத் திட்டமிட்டுப் பாதுகாக்காவிட்டால், மண்அரிப்பு பெருமளவு ஏற்பட்டு, அந்தப் பகுதி நாசமாகிவிடும்.. இந்த அழிநிலப்பகுதியில் வளரக் கூடிய மர இனங்களை அடையாளங்காணும் வகையில் திட்டமிட வேண்டும். மேலும் வழிந்தோடும் மழை நீரைத் தடுப்பணைகள் (அணைத்தேக்கங்கள்) மூலம் சேமித்து வைக்கும் திட்டம் ஒன்றினை வகுத்துச் செயல்பட வேண்டும். இன்னும் மண் அரிக்காமல் இருப்பதற்கான தாவரங்களை அங்கு வளர்க்க வேண்டும். இம்மூன்று திட்டங்களையும் ஒரு சேர நிறைவேற்ற வேண்டும். காலதாமதம் கூடாது.

இந்தப் பகுதியில் காணக்கிடக்கும் படிமங்கள் எவ்வாறு உருவாயின என்பது பற்றிய மாதிரியங்கள், விளக்கப்படங்கள், மற்றும் கடல் சார்ந்த இரசாயனப் பொருள்கள் முதலானவற்றையெல்லாம் தொகுத்து சிறிய அரும்பொருட்காட்சியகம் ஒன்று ஏற்பாடு செய்யலாம். இந்தப் பகுதியில் உள்ள மக்கள் தாங்கள் வாழும் பகுதியின் நில உட்கூறுகளின் சிறப்புகளைத் தெரிந்து கொள்வதற்கும் இதன் பழைமையை நினைத்துப் பெருமையடைய்வும் இது பயன்படும்.

• • •

படிப்பகம்

www.padippakam.com



# கல்வி - தாய்மொழி வழிக் கல்வி:

## இந்திய அரசின் உரிமைப் பறிப்பு எப்போது நீங்கும்? எப்படி நீங்கும்?

கல்வியை அளிக்கிற அதிகாரம், முழுவதுமாக, மாகாண அல்லது மாநில அரசிடமே ஒப்படைக்கப் பட்டிருந்த காலம் 1937-1950. இது 1935 ஆம் ஆண்டைய இந்திய அரசாங்கச் சட்டப்படி இருந்த நிலைமை.

1935 ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டம் தான் 1949 இல் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தின் பெரும்பகுதிக்கு அடிப்படையாகும்.

1950இல் நடப்புக்கு வந்த இச் சட்டத்தில், மொத்த விதிகள் 395. இந்த 395 விதிகளின் முடிவில் அட்டவணைகள் இணைக்கப்பட்டன. அப்படி அப்போது இணைக்கப்பட்ட அட்டவணைகள் எட்டு மட்டுமே.

1999இல் அதே 395 விதிகள் அப்படியே உள்ளன. ஆனால் அட்டவணைகள் மட்டும் பன்னிரண்டு ஆகி விட்டன.

ஏற்கெனவே இருந்த எட்டு அட்டவணைகளில், ஏழாவது அட்டவணையின்படி, அரசின் அதிகாரங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டன. இது அரசியல் சட்டவிதி 246இன் படிச் செய்யப்பட்டது.

அவற்றுள் முதலாவது பட்டியல் இந்திய அரசுக்கு மட்டுமே உரிய அதிகார இனங்களைக் கொண்டது. அப்படிப்பட்ட அதிகார இனங்கள் 97.

இந்த 97இல் இனம் 63 முதல் 66 வரையில் உள்ளவை சிறப்புக் கல்வி நிறுவனங்கள் பற்றிக் கூறுகின்றன. அவை என்னென்ன?.

இனம் 63: காசி இந்து பல்கலைக் கழகம், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம், டில்லி பல்கலைக் கழகம் இவை போன்ற தேசிய முதன்மை வாய்ந்தவையென நாடாளுமன்றத்தால் அறிவிக்கப்படும் பல்கலைக் கழகங்கள்;

இனம் 64: இந்திய அரசின் பண உதவியுடன் நடப்பவையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவை என இந்திய அரசால் அறிவிக்கப்பட்டவையுமான அறிவியல் தொழிற்கல்வி நிறுவனங்கள்:

இனம் 65: உத்தியோகப் பயிற்சி, தொழிற் பயிற்சி, தனிப்பட்ட ஆராய்ச்சிப் படிப்பு, குற்றங்களைப் புலன் அறிவதற்கான அறிவியல் தன்மை வாய்ந்த உதவிகள்; இவைகளுக்கான மத்திய அரசு நிறுவனங்களும் ஏஜென்சிகளும்;

இனம் 66: மேல்படிப்பு, ஆராய்ச்சி, அறிவியல் தொழில் பயிற்சி நிலையங்களிடையே சீரான தொடர்பும் தரக் கட்டுப்பாடும்;

என்கிற உயர்கல்வி பற்றிய 4 அதிகார இனங்கள் இந்திய அரசின் அதிகாரத்துக்கு மட்டும் உரியவை.

மாநிலங்களின் அதிகாரப் பட்டியலில் என்ன கூறப்பட்டுள்ளது?

மாநில அதிகாரங்களின் பட்டியல் 2வது பட்டியல் எனப்படுவது ஆகும். இதன்படி 1 முதல் 66 அதிகார இனங்கள் மாநிலங்களிடம் ஒப்படை செய்யப்பட்டன.

இந்த 66 இனங்களில் கல்வி - பொதுக்கல்வி - பல்கலைக் கழகக் கல்வி பற்றிப் பேசும் அதிகார இனம் 11 ஆகும்.

அதிகார இனம் 11 என்ன கூறுகிறது?

1-வது அதிகாரப் பட்டியலில் அதிகார இனங்கள் எண் 63, 64, 65, 66 இவற்றுக்கும்; 3வது பட்டியலில் அதிகார எண் 25க்கும் உட்பட்ட முறையில் — பல்கலைக் கழகக் கல்வி உள்பட, கல்வி.

அதாவது ஒரு மாநிலத்தின் கல்வி - பொதுக் கல்வி - பல்கலைக் கழகக் கல்வி என்பது மாநில அரசு அதிகாரத்துக்கு உட்பட்டது என்று எண் 11 கூறுகிறது. இந்த நிலைமை எவ்வளவு காலம் நீடித்தது? 1950 முதல் 1976 வரையில் நீடித்தது.

அதன் பிறகு என்ன நேரிட்டது?

இந்திய அரசுக்கு உரிய அதிகாரங்களின் பட்டியலை அப்படியே வைத்துக் கொண்டு, மாநில அரசு அதிகாரங்களின் பட்டியலில் இருந்த சில அதிகாரங்களை இந்திய அரசு பறித்துக் கொண்டது. அப்படிப் பறித்துக் கொள்வதற்கான சட்டத் திருத்தத்தை 1976இல் நிறைவேற்றி, 1977இல் அதை நடப்புக்குக் கொண்டு வந்து விட்டது.

அதாவது, மாநில அரசு அதிகாரங்களின் பட்டியலில் இருந்த கல்வி பற்றிய அதிகார இனம் 11 என்பதை நீக்கம் செய்துவிட்டு, அந்த அதிகாரத்தை 3வது அதிகாரப் பட்டியல் என்கிற பொது அதிகாரங்களின் பட்டியலில் இனம் எண் 25ல் இணைத்து விட்டது.

இந்த எண் 25ல், ஏற்கெனவே, தொழிற் பயிற்சி,

படிப்பகம்

www.padippakam.com



தொழிலாளர் பயிற்சி என்கிற இரண்டு கல்வி இனங்கள் மட்டுமே இருந்தன. 1977 முதல், தொழில்நுட்பக் கல்வி, மருத்துவக் கல்வி, பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட கல்வி (பொதுக் கல்வி) முதலானவையும் சேர்க்கப்பட்டு விட்டன.

இது 1வது பட்டியலில் உள்ள அதிகார எண் 63 முதல் 66 வரை உள்ளவற்றுக்குக் கட்டுப்பட்டதே ஆகும்.

3வது பட்டியல் - பொது, அதிகாரங்களின் பட்டியல். இதில் உள்ள அதிகாரங்கள் 47 ஆகும். இதில் அதிகார இனம் எண் 25 என்பது எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது?

LIST III - CUNCURRENT LIST
Entry 25

Education, including technical education, medical education and universities, subject to the provisions of Entries 63, 64, 65 and 66 of List I; Vocational and technical training of labour.

இந்தச் சட்டத் திருத்தம் 3-1-1977 இல் நடப்புக்கு வந்தது.

அரசியல் சட்டத்தில் இந்த அதிகாரப் பறிப்பு வந்த பிறகு - சனதாக் கட்சி *(1977-1929* ஆட்சி, காங்கிரஸ் கட்சி *(1980 - 1989)* ஆட்சி, சனதாதளக் கட்சி *(1989-1991)* ஆட்சி, காங்கிரசு ஆட்சி *(1991-1996)*, அய்க்கிய முன்னணி ஆட்சி *(1996-1998)*, பாரதிய சனதா ஆட்சி *(1998-1999)* என்கிற ஆட்சிகளை அமைத்தவர்கள் யார்?

காங்கிரஸ், சனதா, சனதாதளம், லோக் தளம், பாரதிய சனதா என்கிற அனைத்திந்தியக் கட்சிகளும், தி.மு.க, அ.இ.அ.தி.மு.க. மற்றும் பல மாநிலக் கட்சிகளுமே ஆகும்.

இந்த ஆட்சிகளுக்கு ஏதோ ஒரு வடிவத்தில் ஆதரவு அளித்தவர்கள் இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் இரண்டு பிரிவுகளும் மற்றும் சில கட்சிகளும் ஆகும்.

இவ்வாறாக — கல்வி, பொதுக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி என்பது மாநில அதிகாரப்பட்டியலிலிருந்து, பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டதனால் தான்.

1. பொதுக் கல்வி என்கிற 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்புக் கல்விக்கான உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை மாநிலங்களில் அமைக்கிற அதிகாரத்தை மய்ய அரசு செலுத்துகிறது.

இதன் கீழ் தொடங்கப்படுகிற உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் இந்தி மட்டுமோ அல்லது இந்தி, ஆங்கிலம் இரண்டும் மட்டுமோ பயிற்று மொழிகளாக இருக்கும். அந்தந்த மாநில மொழி பயிற்று மொழியாக இருக்காது; இருக்க வேண்டியது இல்லை.

தமிழ் நாட்டில் தமிழ் பயிற்று மொழியாக இருக்காது; இருக்க வேண்டியது இல்லை. இது மட்டுமா?

2. தமிழ் நாட்டில் உள்ள அண்ணா பல்கலைக்கழகமோ, சென்னைப் பல்கலைக் கழகமோ, பாரதியார் - பாரதிதாசன் பல்கலைக் கழகங்களோ எந்த ஒரு புதிய தொழில் படிப்புத் துறையை ஏற்படுத்த வேண்டுமானாலும், அல்லது மருத்துவக் கல்வி தொழிலியல் கல்வி நிறுவனம் தொடங்க வேண்டுமானாலும் இந்திய அரசின் கீழுள்ள அனைத்திந்திய தொழிற்கல்விப் பேரவை (AICTE), அனைத்திந்திய மருத்துவப் பேரவை என்கிற கேடுகெட்ட அமைப்புகளிடம் அனுமதி பெற வேண்டும்.

அதாவது உயர்கல்வி நிறுவனம் அமைக்க ஒரு மாநில அரசு அனுமதி தந்த பிறகும் — ஒரு பல்கலைக் கழக ஆட்சிக் குழுவும், பேரவையும் அனுமதி தந்த பிறகும், இந்திய அரசின் அனுமதியைப் பெற்றே தீர வேண்டும். இவ்வாறாக, உயர் கல்வி நிறுவனம் தொடங்குகிற அதிகாரமே மாநிலங்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது.

இந்தக் கேடு கெட்ட நிலைமையை எதிர்த்து ஒழித்திட, இன்று வரையில், தி.மு.க, அ.தி.மு.க. கட்சிகள் எடுத்த முயற்சி என்ன?

மற்ற மாநிலக் கட்சிகளான ம.தி.மு.க., பா.ம.க. எடுத்த முயற்சி என்ன?

அனைத்திந்தியக் கட்சிகளான பொதுவுடைமைக் கட்சிகளும், காங்கிரசு, சனதா, சனதாதளம், லோக்தளம் இவை எடுத்த முயற்சி என்ன?

நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள், பல்கலைக் கழக ஆட்சிக் குழுக்கள், பேரவைகள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மற்றும் தாய் மொழிக் காப்பாளர்கள் எடுத்த முயற்சி என்ன?

இவர்களில் எவரும் எந்த முயற்சியையும் இன்றைக்கும் நாளைக்கும் என்றைக்கும் எடுக்காமலே 9, 10, 11, 12ஆம் உயர்நிலை — மேல்நிலை வகுப்புகளிலோ, கல்லூரிக் கல்விகளிலோ, தொழிற் கல்வித் துறைகளிலோ முழுவதுமாக அந்தந்த மாநில மொழியே பயிற்று மொழியாக வரப் போவது எப்படி? எப்போது?

தமிழ் நாட்டில், இந்த எல்லாக் கல்வியிலும் தமிழ் வழியில் கல்வி வரப் போவது எப்போது ? எப்படி?

மொழியியல் வல்லுநர்களும் கல்வியாளர்களும், தாய்மொழிக்காப்புப் போராளிகளும் அன்பு கூர்ந்து சிந்தியுங்கள்! இவற்றைப் பற்றி, உங்களின் சிந்தனையில் தட்டுப்படுவதை அப்படியே எழுதுங்கள். நாம் ஒவ்வொருவரும் உண்மை நிலையை உள்ளவாறு உணரவேண்டும். என் நோக்கம் இது ஒன்றே.

*1-4-99* வே. ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



**கட்டாயக் கல்வி! தமிழ் வழிக் கல்வி!**
**வருணாசிரம - தீண்டாமை ஒழிப்பு!**

மா.பெ.பொ.க. வினரின்

# கோடை காலப் பிரச்சாரப் பயணம்

## 1999 மே

1,2,3,4,5 - வேலூர் மாவட்டம்
6,7 - திருவண்ணாமலை மாவட்டம்
8,9 - கடலூர் மாவட்டம்
10,11,12,13 - நாகை, திருவாரூர், தஞ்சை மாவட்டங்கள்
14 - விழுப்புரம் மாவட்டம்
15 - காஞ்சி மாவட்டம்
16,17 - சென்னை மாநகரம்
18 - ஆவடி, திருவள்ளூர் மாவட்டம்
19 - தாம்பரம், காஞ்சி மாவட்டம்
22 - திருச்சி நகரம்
23,24 - பெரம்பலூர் மாவட்டம்
27,28,29 - செயங்கொண்டம் நிலக்கரித் தொழிற் சாலைப் பகுதி (பெரம்பலூர் மாவட்டம்)

அன்பார்ந்த தோழர்களே!

* பயணத் திட்டத்தில் மே 20க்குப் பிறகு உள்ள மாற்றங்களுக்கு ஏற்ப, பயண ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.
* வாய்ப்புள்ள எல்லா மாவட்டங்களிலும் ஒலி பெருக்கி பொருத்திய வேன் மூலம் பயணம் போக ஏற்பாடு செய்யுங்கள்.
* பயணத்தின் போது ஊர்தோறும் வீடுதோறும் துண்டு அறிக்கைகள் தரப்படவும், கொள்கை விளக்க நூல்கள் விலைக்கு விறகப்படவும் ஆர்வத் துடன் ஏற்பாடு செய்யுங்கள்.

மா.பெ.பொ.க.

மதுரையில்

# ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு

7.3.99 ஞாயிறு காலை 10 மணியளவில் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு மதுரை தமுக்கம் திடலில் தமிழறி ஞர் சாலையார் அரங்கில் பல்லாயிரக்கணக்கில் திரண்டி ருந்த தமிழ் மக்களின் எழுச்சிமிக்க உணர்வுகளோடு தொடங்கியது. தேனிசை செல்லப்பா குழுவினர் நாடி நரம்புகளை முறுக்கேற்றும் வண்ணம் மொழி உணர்வும், இன உணர்வும் ததும்பும் பாடல்களை இசைத்தனர். அடுத்து மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் கா. பரந்தாமன் வரவேற்புரை நிகழ்த்தினார். மதுரை ஆதினம் அருணகிரி நாத ஞானசம்பந்த தேசிகன் மாநாட்டைத் தொடங்கி வைத் துப் பேசினார். தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு அமைப்பாளருமாகிய பழ. நெடுமாறன் தலைமை உரை கேட்டார்ப் பிணிக்கும் தகையதாய் அமைந்தது. பாவலரேறு பெருஞ்சித்திரன் படத்தை அருட்தந்தை சேவியர் அருள்ராசு வும், தமிழறிஞர் சாலையார் படத்தை கவிஞர் இன்குலாபும் திறந்து வைத்து உரை நிகழ்த்தினர்.

இந்திய வெளியுறவுத் துறை முன்னாள் செயலாளர் ஏ.பி. வெங்கடேசுவரன், பண்ருட்டி இராமச்சந்திரன், பெ. மணியரசன், தியாகு, சுபவீ, சொல்லாய்வறிஞர் ப. அருளி, புலவர் இறைக்குருவனார், விடுதலை இராசேந்திரன், தஞ்சை அ. இராமமூர்த்தி, பேராசிரியர் பா. கல்யாணி, கவிஞர் அறிவுமதி, வழக்கறிஞர் துரைசாமி, புலவர் கி.த. பச்சையப்பன், ஆந்திர மாநிலம் தெலுங்கு விடுதலை முன்னணியைச் சேர்ந்த டாக்டர் மித்ரா உள்ளிட்ட பலரும் உரை நிகழ்த்தினர். மார்க்சிய பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியின் சார்பில் கவிஞர் தமிழேந்தி பேசினார்.

பிற்பகலில் முனைவர் சாலினியார் தலைமையில் நடைபெற்ற மகளிர் அரங்கில் தாமரை பெருஞ்சித்திரனார், அற்புதம் குயில்தாசன் தேன்மொழி, கவிதா, ஆர்த்தி ஆகி யோர் கலந்து கொண்டனர். அடுத்து மாணவர் அரங்கம் நடைபெற்றது.

மாநாட்டின் இறுதியில் தமிழீழ விடுதலையை விரைவு படுத்தும் எழுச்சிமிக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன. ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு இல்லை, இராசிவ் காந்தியின் படுகொலைக்குப் பின் ஈழப் போராளி கள் தமிழ் மக்களின் ஆதரவை இழந்து விட்டனர் என்று நாளும் புளுகி வரும் நம் இன எதிரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் வண்ணம் அமைந்திருந்தது இந்த மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது. தமிழக மக்கள் அனைவரையும் ஈழ விடுதலைக்கு ஆதரவாக ஓரணியில் திரட்டும் உரிமை முழக்க மாநாடாக மதுரை மாநாடு அமைந்து விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# ஈழம் ஈழம் ஈழம் ஈழம்

## இன்றைய நிலை என்ன?

- **55,000** தமிழீழ மக்களை இலங்கை அரசுப் படைகள் கொலை செய்துள்ளன.
- **66,742** சிறீலங்கா மக்களை இலங்கை அரசு படுகொலை செய்துள்ளது.
- **2,75,000** தமிழீழ மக்கள் சொந்த நாட்டிற்குள்ளேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.
- **5,00,000** தமிழீழ மக்கள் நாட்டுக்கு வெளியே அகதிகளாக விரட்டப்பட்டுள்ளனர்.
- **65,000** தமிழீழ - சிறீலங்கா மக்கள் மன நோயாளிகளாக உள்ளனர்.
- **7,000** தமிழீழ - சிறீலங்கா மக்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.
- **32,300** தமிழீழ - சிறீலங்கா மக்கள் காணாமல் போனவர்கள் பட்டியலில் உள்ளனர்.
- **9,000** தமிழீழ - சிறீலங்கா தேசபக்தப் போராளிகளை இலங்கை அரசு படுகொலை செய்துள்ளது.
- **11,750** சிறீலங்கா படையினரை மேலே கண்ட கோரக் கொலைகளை நடத்திட, இலங்கை அரசு பலி கொடுத்துள்ளது.
- **3,25,000** தமிழீழ - சிறீலங்கா பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக வேலை செய்கின்றனர். இவர்களுக்கு ஊதியத்துக்கு உத்தரவாதம் இல்லை; பாலியல் கொடுமைகள் மறுபக்கம்.
- **30,000** சிறுவர், சிறுமியரை, இலங்கை அரசு சுற்றுலாத்துறை விபச்சாரத்துக்குப் பலியாக்கியுள்ளது. 'இண்டர் நெட்'டில் விபச்சாரத்துக்கு ஆள்கேட்டு விளம்பரம் செய்யப்படுகிறது.
- **1,75,000** தமிழீழ, சிறீலங்கா பெண்கள் விபசாரத் தொழிலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.
- **3,50,000** இளைஞர்கள், வேலையற்றோர் பட்டியலில் உள்ளனர்.
- **1,00,000** தொழிலாளர்கள் விதிக்கு விரட்டப்பட்டுள்ளனர்.

★ **மனித உரிமைக் காப்பாளர்களே! ஒடுக்கப்பட்ட - சுரண்டப்பட்ட மக்களே! சிந்தியுங்கள்!!**

★ **தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தாருங்கள்!!**

★ **தமிழீழத் தேச பக்த, புரட்சிகர சனநாயக அரசியல் பாதையில் ஒன்றுபடுங்கள்!!**

**(நன்றி: ''தேசபக்தன்'' அரசியல் இதழ்-15, 1998)**

## சங் பரிவாரத்தின் புதிய குழந்தை

பா.ச.க. அரசு தனது நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, அரசின் நிதி உதவியோடு இந்துத்துவக் கருத்துக்களைப் பரப்புவதற்காக ''பாரத் புனர் நிர்மாண் வாகினி'' என்ற இளைஞர் அமைப்பை ஏற்படுத்திவுள்ளது. இந்த அமைப்பில் 18 முதல் 35 வயதிற்குள்ளான இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்கள் பயிற்சிக்குப் பின் ஒரு வருடம் கட்டாய சேவையில் ஈடுபட வேண்டும்.

நன்றி: புதிய சனநாயகம்

## கை கொடுக்கும் கைகள்

இந்தியாவுக்கு ஆண்டொன்றுக்கு வெளிநாடுகளுடனான வணிகத்தில் 16,000 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதனைப் பெருமளவிற்கு ஈடு செய்ய அரபு நாடுகளில் பணியாற்றும் இலட்சக் கணக்கான இந்தியத் தொழிலாளர்கள் ஆண்டுதோறும் அனுப்பும் 11,000 கோடி ரூபாய்க்கு மேலான அந்நியச் செலாவணியே உதவுகின்றது.

ஜி.வி. இராமகிருஷ்ணன்

படிப்பகம்

www.padippakam.com



# இந்துக்களுக்கு முறையான ஆண்டுக் கணக்கு உண்டா?

**வாலாசா வல்லவன்**

18-3-99 அன்று 'தினமணி' செய்தித் தாளில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தென் பாரத பிரச்சாரச் செயலாளர் வி. சண்முகநாதன் அவர்கள் இந்துக்களின் ஆண்டு கணக்கிடும் முறையை உயர்த்தி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக் கட்டுரையின் சுருக்கம்:

''உலகிலேயே இந்துக்கள் தான் அறிவியல் அடிப்படையிலான, முறையான ஆண்டுக் கணக்கைக் கண்டுபிடித்தார்கள். இப்போது நடைபெறுவது கலியுகம். இந்தக் கலியுகத்தில் 1999 மார்ச் மாதம் 17ஆம் தேதியுடன் 51 நூற்றாண்டுகள் முடிவடைந்து 52ஆவது நூற்றாண்டு மார்ச் 18ஆம் தேதி தொடங்குகிறது. அதாவது கலியுகத்தில் 5,100 ஆண்டுகள் முடிவுற்று 5,101ஆவது ஆண்டு தொடங்குகிறது'' என எழுதியுள்ளார்.

இந்துக்களின் காலக் கணக்கீடு மிகவும் தொன்மையானது எனவும், முதலாவது கிருதயுகம் 17,28,000 ஆண்டுகள்; இரண்டாவது திரேதயுகம் 12,96,000 ஆண்டுகள்; மூன்றாவது துவாபரயுகம் 8,64,000 ஆண்டுகள்; நான்காவது யுகம் இப்போது நடைபெறும் கலியுகம் 4,32,000 ஆண்டுகள் எனவும்; இந்தக் கலியுகத்தில் நாம் 5,100 ஆண்டுகளை முடித்திருக்கிறோம் என்றும், கலியுகத்தில் மீதம் 4,27,800 ஆண்டுகள் உள்ளன எனவும் எழுதியுள்ளார். இந்த யுகங்களின் ஆண்டுக்கணக்கு எந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது? இது ஒரு பெரிய பித்தலாட்டம் என்பதைத் தந்தை பெரியார் பலமுறை அம்பலப்படுத்தியுள்ளார்.

அண்ணல் அம்பேத்கர் 'இந்துமதத்தின் புதிர்கள்' (Riddles in Hinduism) என்ற நூலில் எண்ணற்ற கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளார்.

சண்முகநாதன் அக் கட்டுரையில் மேலும் கூறுகிறார். ''மிகத்துல்லியமான கால அளவாக, 'த்ருத்தி' என்ற சொல்லை நம் முன்னோர்கள் பயன்படுத்தினார்கள். இந்தக் கால அளவு ஒரு வினாடியில் 33,750இல் ஒரு பகுதியாகும்''.

ஒரு வினாடி என்பதே ஒரு சிட்டிகை நேரம் தான். இதில் 33,750 இல் ஒரு பகுதிகால அளவைக் கூட துல்லியமாகக் கணித்தார்கள் என்பது அண்டப் புளுகும் ஆகாயப் புளுகும் தவிர வேறில்லை.

உண்மையில் கலியுகம் தொடங்கி 5,100 ஆண்டுகள் ஆகியிருந்தால், அதை ஏன் இத்தனை ஆண்டுக் காலமாக இந்துக்கள் எதிலும் பின்பற்றவில்லை?

கிருஷ்ணன் இறந்த நாள் முதல் கலியுகம் தொடங்கியதாகக் கூறும் இவர்கள், மகாபாரதம் எப்போது நடைபெற்றது எனக் கூற முடியுமா? மகாபாரதப் போர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பும் 2500 ஆண்டுகளுக்குப் பின்பும் நடந்திருக்கலாம் எனப் பெரும்பாலான வரலாற்றுப் பேராசிரியர்கள் கருதுகின்றனர். அப்படியிருக்க கிருஷ்ணன் இறந்து 5,100 ஆண்டுகள் ஆனதாக எதை வைத்துக் கொண்டு இவர்கள் கூறுகிறார்கள்?

உண்மையில் ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் பா.ச. கட்சியினரும் செய்வது புராணக் கதைகளை உண்மை வரலாறாக மாற்றும் திருட்டு முயற்சியே ஆகும்.

கிறித்து பிறந்த நாளை ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டு உலகம் முழுவதும் உள்ள கிறித்துவர்கள் அந்த நாளைப் புத்தாண்டு பிறந்த நாளாகக் கொண்டாடுகிறார்கள்.

உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்கள், முகமது நபி மெக்காவில் இருந்து மதினாவிற்கு ஓடிய ஆண்டிலிருந்து 'ஹிஜ்ரி' ஆண்டாகக் கொண்டு அந்த நாளைப் புத்தாண்டு பிறந்த நாளாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் இந்துக்கள் அனைவருக்கும் என்றைக்காவது பொதுவான ஒரு புத்தாண்டு நாள் உண்டா? கேரளத்தில் கெல்லம் ஆண்டு; ஆந்திரத்தில் சாலிவாகன சகாப்தம் என இந்தியா முழுவதும் 13 வகையான புத்தாண்டுகள் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பஞ்சாங்கம் உள்ளது. தமிழ்ப் புத்தாண்டு, தெலுங்குப் புத்தாண்டு, பஞ்சாபிப் புத்தாண்டு, ஒரியப் புத்தாண்டு என மொழி அடிப்படையில்தான் புத்தாண்டுகள் கொண்டாடப்படுகின்றன. இந்தப் புத்தாண்டுகளுக்கு ஆரியக் கதைப் பின்னப்பட்டது அருவருப்பான செய்தி.

உண்மையில் இந்து மதம் என்று இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான மதம் என்றைக்கும் இருந்ததில்லை என்பதைத் தானே இவை காட்டுகின்றன?

படிப்பகம்

www.padippakam.com



ஆரியர்களின் முதல் வானவியல் அறிஞர் ஆரிய பட்டர் என்பவரே. அவருடைய காலம் கி.பி. 499 தான். (ஆதாரம்: A HISTORY OF INDIA, Volume I, by ROMILATHAPAR P.155.). அதற்கு முன் ஆரியர்களுக்கு வானவியல் அறிவு ஏது? அப்படியிருக்க யுகக் காலக் கணக்கீடுகளைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் ரிஷிகள் கணித்திருக்கிறார்கள் என்று சொல்வது எவ்வளவு பெரிய மாய்மாலம்? இன்னும் சொல்லப் போனால் தமிழர்களிடம் இருந்து வானவியலைத் திருடியவர்களே ஆரியர்கள். அதற்கும் சான்றுகள் உள்ளது. ''ஆரியர்கள் இந்த நாட்டிற்கு வருவதற்கு முன்பே தமிழர்கள் வானவியலில் சிறந்து விளங்கினார்கள்'' என்று திராவிட இந்தியா என்ற நூலை எழுதிய சேஷ அய்யங்கார் சான்றுகளுடன் நிறுவியுள்ளார். (ஆதாரம்: 'Dravidian India' by T.R. SESIIA IYENGAR, P.130)

சண்முகநாதன் மேலும் எழுதுகிறார்: ''ஒரு முறை வாஸ்கோடகாமா தென்னாப்பிரிக்காவின் கடல் ஓரம் நின்றிருந்தார். உப்புக் காற்று திடீரென வாசனைக் காற்றாக மாறியது எப்படி என்று கேட்டார். அதோ, தெரிகிறதே அந்தக் கப்பல் தான் காரணம் என்றவர்கள், அதில் ஏலக்காய், கிராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் வருகின்றன என்று சொன்னார்கள். இந்தக் கப்பலே இவ்வளவு வாசனை என்றால் அந்த நாடு எவ்வளவு வாசனையாக இருக்கும் என்று சொல்லி, நமது நாட்டிற்கு வழி கண்டு பிடித்தார்'' வாஸ்கோடகாமா காலத்தில், இன்றைக்குப் போல, 'இந்தியா' ஒரே நாடாக இருந்ததில்லை. இன்னும் சொல்லப் போனால் அன்றைக்குச் சென்ற கப்பல் தமிழனுடைய கப்பல். உலகிலேயே பழங்காலத்தில் வாசனைத் திரவியங்களைக் கடல் வாணிகம் மூலம் ஏற்றுமதி செய்தவர்கள் தமிழர்கள் மட்டுமே. அன்று பெரிய பெரிய கப்பல்களைக் கட்டியவர்கள் தமிழர்கள் என்று பிளைனியின் குறிப்பை மேற்கோள் காட்டுகிறார் அறிஞர் ரோமிலாதாப்பர். இன்றைக்குப் போலவே அன்றே சுங்கத் துறையை வைத்திருந்தவர்கள் தமிழர்கள். இந்தியாவின் ஒட்டுமொத்த வணிகமும், தமிழ்நாட்டின் துறைமுகங்கள் வாயிலாகவே நடை பெற்றது என ரோமிலா தாப்பர் தம்முடைய இந்திய வரலாற்றில், பக்கம் 113, 114இல் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வளவு தொன்மையும், சிறப்பும் தமிழர்களுக்கு மட்டுமே உண்டு என்பதை ஏற்றுக் கொள்ள மனமில்லாத ஆர்.எஸ்.எஸ். கூட்டம் இந்தப் பெருமை அனைத்தும் பாரதத்திற்கு உரியவை என்று எழுதுவது எவ்வளவு அருவருப்பான கயிறு திரிப்பு வேலை?

நமது முன்னோர்கள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்று கூறும் சண்முகநாதன், அந்தப் பள்ளிகளில் யாரைச் சேர்த்துக் கொண்டார்கள் என்று எழுதவில்லையே, ஏன்? ஹர்ஷர் காலத்தில் இருந்த நாலந்தா பல்கலைக் கழகம் தவிர, வேறு எந்தக் கல்வி நிறுவனத்திலும் இரண்டாயிரம் ஆண்டு காலமாக, சூத்திரர்களின் ஆதி சூத்திரர்களின் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள கொள்ளவில்லையே, ஏன்? கல்வி என்றாலே, அன்று, அது வேதக்கல்வி. அது பார்ப்பன மாணவர்கள் மட்டுமே சேரத் தகுதியானது என்ற நிலை தானே இருந்தது! ஆங்கிலேயர்கள் ஆட்சி வந்த பிறகு தானே, சில சூத்திர மாணவர்களும், ஆதி சூத்திரமாணவர்களும் கல்வி பயில முடிந்தது!

இந்த நாட்டில், நீண்ட நாட்களாக மிகச் சிறந்த சனநாயகம் தழைத்ததாக சண்முகநாதன் கூறுகிறார்.

சாதிக்கு ஒரு நீதி வழங்கிய மனுநீதி ஆண்ட நாட்டில் சனநாயகம் தழைத்து ஓங்கியதாகக் கூறுவதே மாபெரும் மோசடியாகும். ஆரியர்களின் சட்டம் இந்த நாட்டில் நடைமுறைக்கு வந்த பிறகு அனைவருக்கும் சம உரிமை என்பது மறுக்கப்பட்டது. காட்டாக, தமிழ்நாட்டில் பழங்காலத்தில் குட ஓலை முறையில் தேர்தல் நடைபெற்று, மிகச் சிறந்த பஞ்சாயத்து ஆட்சி நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில் அங்கும் சமத்துவம் பேணப்படவில்லை என்பதை வரலாறு காட்டுகிறது.

குடஓலைமுறையில் வாக்களிப்பதற்கும், தேர்ந்தெடுக்கப்படுவதற்கும், கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும் என அன்று நிபந்தனை விதிக்கப்பட்டது.

1. வயது 35க்கு மேலும் 70க்கு கீழும் இருக்க வேண்டும்.
2. குறைந்தது ஆறு வேலி வரிகட்டக் கூடிய நிலம் வைத்திருக்க வேண்டும்.
3. சொந்தமனையில் அவர்கள் வீடு கட்டிக் கொண்டிருக்க வேண்டும்.
4. இவை எதுவும் இல்லை என்றால் நான்கு வேதங்களில் ஒன்றாவது தெரிந்திருக்க வேண்டும்.

மேலே கண்ட தகுதிகள் பெற்றிருந்தாலும் 1. பார்ப்பனைக் கொலை செய்தவர்கள் 2. மது குடிப்பவர்கள் 3. குருவின் மனைவியைப் புணர்ந்தவர்கள் 4. சொந்தச் சாதியை விட்டு கீழ்ச் சாதியினருடன் உறவு வைத்திருப்போர் ஆகியோர் வாக்களிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள். குட ஓலை முறையைப் பற்றிய மேலே கண்ட வாசகங்களைக் கொண்ட உத்திரமேரூர் கல்வெட்டைக் கண்ட பின்பு, அன்றே சன நாயகம்

படிப்பகம்

www.padippakam.com



இருந்தது என்று எப்படி நாம் ஒப்புக் கொள்ள இயலும்? அன்று தாழ்த்தப்பட்டவர்களுக்கும், சூத்திரர்களுக்கும் வரிக் கட்டக்கூடிய 6 வேலி நிலம் ஏது? எனவே அவர்கள் வாக்களிக்கவும், நிர்வாகத்தில் பங்கு பெறவும் தடுக்கப்பட்டார்கள். குட ஓலை முறையில் சிறந்த சனநாயகம் நடைபெற்றது என்பது வெறும் பார்ப்பன மேல் சாதி நாயகமே ஆகும். (ஆதாரம் EVOLUTION OF HINDU ADMINISTRATIVE INSTITUTIONS IN SOUTH INDIA BY S. KRISHNASWAMY AIYANGAR P. 191-193) ஆகவே ஆரியர்களின் சமூக அநீதிச் சட்டங்கள் தமிழகத்தில் வந்த பிறகு இங்கும் சமத்துவம் பேணப்படவில்லை.

ஆரியர்கள் இந்த நாட்டிற்கு வரும் முன்பே தமிழர்கள் சிறந்த நாகரிகத்துடன் வாழ்ந்தனர். ஆரியர்கள் இந்நாட்டிற்கு வரும் முன்னரே தமிழர்கள், இரும்பு, செம்பு, வெள்ளி, தங்கம் ஆகிய உலோகங்களை நன்கு பயன்படுத்தினர். திராவிடர்களுக்கு இரும்பைப் பற்றித் தெரியாது என்ற வின்ஸ்ட்டன் ஸ்மித்தின் கூற்றை, பி.டி. சீனிவாச அய்யங்கார், பல்வேறு தொல்லியல் சான்றுகளுடன் மறுத்துள்ளார். ஆரியர்களுக்கு முன்பே தமிழர்கள் இரும்பைப் பயன்படுத்தியுள்ளதை ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டியுள்ளார். (STONE AGE IN INDIA BY P.T. SRINIVASA AIYANGAR, P. 54.)

பாரதப் பண்பாடு தொன்மையானது; அறிவியல் அடிப்படையில் ஆனது என்று கூறும் சண்முகநாதன் போன்ற ஆஸ்.எஸ்.எஸ். கூட்டம், தமிழ்ப் பண்பாடு ஒன்று இங்கு சிறப்புடன் இருந்தது என்பதைத் திசை திருப்பி மறைத்து விட்டு, ஆரியப் பண்பாடு தான் சிறந்தது எனக் காட்ட முயல்வது மிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது ஆகும்.

ஆரியப் பண்பாடு என்பது வேள்வி என்ற பெயரில் நரபலி முதல் விலங்குகளைப் பலியிடுதல் வரை உயிர்க் கொலையைச் செய்வதே ஆகும். ஆரியர்கள் வெறும் தீ வணக்கத்தை மேற்கொண்டவர்கள்; பலதாரமணத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள்; 1955 இந்துச் சட்டம் திருத்தப்படும் வரையில் பலதார மணம் இங்கு நடைமுறையில் இருந்தது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதைத் தமிழ்ப் பண்பாட்டில் இருந்து தான் கைக் கொண்டதாக அண்ணல் அம்பேத்கார் கூறியுள்ளார். ("Hinducode Bill' BY Dr. AMBEDKAR'S Speaches and writings, volume 14, P. 269)

எனவே இந்தியாவிற்கே நாகரிகத்தைக் கற்றுத் தந்தவர்கள் தமிழர்களே ஆவார்கள். இங்கு பாரதப் பண்பாடு என்று ஒன்று எப்போதுமே இல்லை. ஒவ்வொரு மொழி இனத்திற்கும் தனித்தனிப் பண்பாடு தான் நீண்ட நெடுங்காலமாக இந்தியாவில் இருந்து வருகிறது.

## தமிழ்நாடு திராவிடக் கழகம் வரவேற்கத்தக்க இணைப்பு முடிவு

திராவிடர் கழக மத்திய கமிட்டி உறுப்பினராக 1975 வரை விளங்கியவர் திருவாரூர் கே. தங்கராசு. அவர் எந்தவித முகாந்திரமும் இல்லாமல், 1975 செப்டம்பரில், திராவிடர் கழக அடிப்படை உறுப்பினர் என்கிற நிலையிலிருந்தே அநியாயமாக நீக்கப்பட்டார். இருப்பினும் கடந்த 24 ஆண்டுகளாகத் தொடர்ந்து 'திராவிடர் கழகம்' என்ற பெயரிலேயே பெரியாரின் கொள்கைகளைப் பரப்பி வந்தார்.

கோவை கு. இராம கிருஷ்ணன் 1987 இல் திராவிடர் கழகத்திலிருந்து திடுமென விலக்கப்பட்டார். அவரும் அன்று முதல் சோர்வின்றி 'திராவிடர் கழகம்' என்ற பெயரிலேயே தனியே இயங்கி வந்தார்.

வாய்ப்பு நேரும் போதெல்லாம் திருவாரூர் கே. தங்கராசு, வே. ஆனைமுத்து, கு. இராமகிருஷ்ணன், ஆனூர் செகதீசன் ஆகியோர் சார்ந்த தனித்தனி அமைப்பினர் ஒரே மேடையில் ஒன்று பட்டுச் செயல்படுவதையும், ஒன்றுபட்டுக் கிளர்ச்சிகள் நடத்துவதையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்போது திருவாரூர் கே. தங்கராசு, கோவை கு. இராமகிருஷ்ணன் இருவரும் பொறுப்பேற்று இயக்கி வந்த தனித்தனி அமைப்புகளான இரண்டு திராவிடர் கழக அமைப்புகளும் ஒன்றாக இணைந்து, "தமிழ்நாடு திராவிடர் கழகம்" என்ற பெயருடன் செயல்பட முன் வந்திருப்பதை மனமார வரவேற்கிறோம். இயக்கத்தின் பெயர் மாற்றத்திற்கேற்பக் கழகத்தின் கொடியின் அமைப்பையும் மாற்றி அமைத்துக் கொண்டு செயல்படவிருப்பது மிக மிக மகிழ்ச்சிக்குரியது. வெல்க ஒற்றுமை நோக்கிய முடிவு.

மா.பெ.பொ.க.

## பெரியாரும் வட இந்தியரும்

"வட இந்தியாவில் உள்ள உயர் சாதிப் பார்ப்பனர்கள் ஜோதிபா புலே, அம்பேத்கர் மற்றும் சாகு மகராஜ் போன்ற தலைவர்களைச் சகித்துக் கொள்கின்றனர். ஆனால், பெரியாரை அவர்கள் 'ராமதுரோகி'யாகப் பார்க்கிறார்கள். பெரியாரை அவர்களால் சீரணித்துக் கொள்ள முடியவில்லை. ஏனெனில் இந்து மத்தை மிகக் கடுமையாகத் தாக்கியவர் தந்தை பெரியார். தற்போதுள்ள தலித் இயக்கங்கள் பெரியாரின் கருத்துக்களை உள் வாங்கத் துவங்கியுள்ளன."

டாக்டர் பிரேம்பதி பேட்டியில்
சனவரி 99, தலித் முரசு

படிப்பகம்

www.padippakam.com



## நூல் மதிப்புரை

**நூல்: தமிழறிஞர் நாரண துரைக்கண்ணன்**
**ஆசிரியர்: தி.நா. அறிவு ஒளி**

இன்றைய தமிழறிஞர்கள் அதிகம் அறிந்திராத தமிழறிஞர் நாரண. துரைக்கண்ணன். துரைக்கண்ணன் புதுமைத் தமிழிலக்கியத்தில் 'அமைதிப் புரட்சி' படைத்தவர். தமிழ்த் தாளிகை வரலாற்றில் வெற்றி களைக் குவித்தவர்.

24.8.1906 இல் மயிலாப்பூரில் ஏழைக் குடும்பத்தில் முதல் மகனாகப் பிறந்தார். இளமையிலேயே தந்தையை இழந்தார். குடும்பப் பொறுப்பு இளந் தோள்களில் பாரமாக அழுத்திற்று.

தனித்தனி ஆசிரியர்களிடம் பாடம் கேட்டு தமிழ் அறிஞரானார்; எழுத்தாளரானார். ஆனாலும் வயிற்றுப் பாட்டிற்காகப் பல்வேறு பணிகளை மேற் கொள்ள வேண்டியிருந்தது.

அவர் ஆசிரியராக இருந்த 'ஆனந்த போதினி', 'பிரசண்ட விகடன்' ஆகிய தாளிகைகளில் அக் காலத்தில் பேர் பெற்ற எழுத்தாளர்களான பாவேந்தர், கவிமணி, டி.கே.சி., இரா.பி. சேதுப்பிள்ளை போன்றவர்களின் எழுத்துக்களை வெளியிட்டதுடன், புதிய புதிய எழுத்தாளர்களை இதழ் தோறும் அறிமுகப் படுத்தினார்.

அவரது உயிரோவியம் சிந்தனையைத் தூண்டும் ஒரு புதினமாகும். எல்லாவிதமான இலக்கியப் படைப்புகளையும் அவர் படைத்தார். அவற்றில் தன் முத்திரையைப் பதித்தார்.

தமிழகத்தில் இன்றுள்ள பல மூத்த எழுத்தாளர் களை ஆர்வமூட்டி, ஆதரவளித்து வளர்த்தவர் துரைக் கண்ணன். பழமைக்கும், புதுமைக்கும் பாலம் அமைத்தவர்.

வறுமையில் பிறந்து, வாழ்ந்து 22.7.1996 இல் இறந்த அவரின் செம்மாந்த வாழ்க்கையின் மாண்புகளைத் தமிழர்கள் அறிந்துகொள்ள இந்நூல் உதவுகின்றது. தூய தமிழில் எழுதப்பட்ட இந்நூலை ஆசிரியரே வெளியிட்டுள்ளார். ஆசிரியரின் கடமை உணர்ச்சி போற்றுதற்குரியதாகும்.

இந்நூலுக்கு 'ராணி' ஆசிரியர் தோழர் அ.மா.சாமி அணிந்துரை தந்துள்ளார். தோழர் வே. ஆனைமுதது விரிவான முன்னுரை அளித்துள்ளார்.

நூல் கிடைக்குமிடம்:
தி.நா. அறிவுஒளி,
2/25, பூங்குன்றனார் தெரு, இணைவு-2
மறைமலை நகர் 603 209
விலை: ரூ.60/-

## வளங்காணும் அஃறிணைகள்!

குறிஞ்சிமலர் வளர்ச்சிபெற பாடு பட்டேன்;
நெருஞ்சி முள்ளாய்க் கால்குத்த நின்றுவிட்டேன்!
வெறி கொண்டு கொள்கையென நம்பி வந்தேன்
வெறும் வாயால் மென்றார்கள்; உணர்ந்து வெந்தேன்!

துளசியென தூய்மையுடன் நட்டுப் பார்த்தேன்!
தொண்டுமனத் தும்பைப்பூ மொட்டும் சேர்த்தேன்!
களர்நிலத்தில் கரும்புமிகு வளரும் என்றே
காலமெல்லாம் பாடுபட்டு ஓய்ந்து போனேன்!

முன்செல்லும் ஏர்நேராய்ப் போகும் என்றே,
முனைமுகத்துத் தொண்டனாக ஏகி நின்றேன்!
கண் காணும் காட்சிகளை என்ன வென்பேன்;
தண்நிலவு, தணலாக மாறக் கண்டேன்!

இருக்க இல்லம்; உடுத்த உடை; வயிற்றுச் சோறு
என்றெல்லாம் வாய்கிழியப் பேசக் கண்டேன்!
தேவைக்கே ஊதியத்தைத் தேடி வந்து,
தரமறுக்கும் தருக்கரைநான் கண்டு நொந்தேன்!

தன்னலத்துக் கள்ளியிலே பொது நலத்துத்
தண்ணீரை ஊற்றுகின்றார்! ஏமா றாதீர்!
தன்வீட்டு நலமொன்றே குறிக்கோள் கொண்டு
தாயகத்துத் தலைவர்களாய் உலவு கின்றார்!

பொதுநலத்தைப் பணம் பண்ணி, ஏழை வாடும்,
பொழுதெல்லாம் தன்வாழ்வை உயர்த்திக் கொள்ளும்;
எதுவெல்லாம் அஃறிணையோ அதுவெல் லாம் நல்
ஏற்றதொரு வளமையுடன் இருக்கக் கண்டேன்!

பெரியாரை, அண்ணாவை உதடு சொல்லும்!
பெரும்புரட்சிக் கொள்கையினை உள்ளம் கொல்லும்!
புரிந்தோர்கள் பலருண்டு; அறிந்தேன் நானும்!
பொல்லாத தலைமைகளால் நாடே எள்ளும்!

அரசியலைப் பொல்லாத(து) என்றே எண்ணும்
அவப்பெயரை இந்நாளில் வளர்த்து விட்ட
முறைகெடுக்கும் முழுமூடர்! இவர்கள் தம்மை
முச்சந்தி சவுக்கடிக்கு நிறுத்த வேண்டும்!

ஓவியக் கவிஞர் **வண்ணப்பூங்கா வாசன்**

படிப்பகம்

www.padippakam.com



# பார்ப்பனரின் வலிமை

து. தில்லைவனம்

தந்தை பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்கள் ஓர் அய்ம்பது ஆண்டுக்காலம் தன்னலமின்றி, திராவிடர்களை — குறிப்பாகத் தமிழர்களை மானமும் அறிவும் உள்ளவர்களாக மாற்றுவதற்கு அரும்பாடு பட்டு உழைத்தார். இப்பணியைச் சுயமரியாதைப் பணி என்றழைப்பது வழக்கம்.

வெற்றிக்கான பாதை திறக்கப்பட்டுவிட்டது போல் தோன்றினாலும் தற்போது முட்செடிகளும், பாம்புப் புற்றுகளும் பல்கிப் படர்ந்து அப் பாதை அடைபட்டு விட்டதோ என்று எண்ணும் சூழ்நிலையில் நாம் இருபத்தொன்றாம் நூற்றாண்டை எதிர் கொள்கின்றோம்.

பார்ப்பனர் பெற்றுள்ள வலிமையாலேயே இங்கு பெரியாரின் பணிகளுக்கு முழுப்பயனும் விளையாது போகின்றது. பார்ப்பனர் தம் வலிமைக்கான மூலங்களிலொன்றைக் காண்போம்.

1999 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு 'சன் தொலைக்காட்சி' தன்னுடைய அப்பட்டமான சினிமாத் தனத்திலிருந்து சற்றே விலகி 'கிண்டலோ கிண்டல்' எனும் நிகழ்ச்சி ஒன்றை ஒளிபரப்பிற்று.

அது பல கூறுகளைக் கொண்ட நிகழ்ச்சி. ஆயினும் அனைத்தும் முழுக்க முழுக்க நகைச்சுவை நிகழ்ச்சிகளே.

அதில் நடிகர் சின்னி செயந்த் என்பவர் தனி நடிப்பு நிகழ்ச்சியாக ஒன்றை நடத்தினார். அத் தனி நடிப்பில் ஒரு பார்ப்பனக் குடும்பத் தலைவர், தலைவி, மகன், மகள், அடங்கியதாக ஒரு குடும்பத்தை நம் கண்முன் கொண்டு வந்தார். அக் குடும்பத்திலுள்ள மகன் அமெரிக்காவில் நிரந்தரமாகக் குடியேறப் போகிறார். குடும்பத்திலுள்ள மற்ற மூவரும் அவருடனேயே நிரந்தரமாக அமெரிக்கா செல்லத் திட்டமிட்டு விட்டனர்.

அமெரிக்கப் பழக்க வழக்கங்கட்குத் தங்களை இங்கேயே தயார்படுத்திக் கொள்வதற்காக குடும்பத்தில் உள்ள நால்வரும் மது அருந்துவதையும், புகை பிடிப்பதையும் பழக்கப்படுத்திக் கொள்வதென முடிவு மேற்கொண்டு மது, புகை ஆகிய இரண்டிற்கும் குடும்ப உறுப்பினர்களை அறிமுகப்படுத்தும் வேலையை சாத்திர, சம்பிரதாயப்படி தொடங்கி வைக்க ஒரு புரோகிதப் பார்ப்பனரை அழைப்பதில் நிகழ்ச்சி தொடங்கியது. தொலைபேசியில் ஒப்புதல் தந்தார் புரோகிதர்.

திருமணம், புது இல்லம் புகுதல், கரும காரியம் போன்ற நிகழ்ச்சிகளின் போது புரோகிதப் பார்ப்பனர்கள் எவ்வாறு வடமொழியில் சில சொற்களை (மந்திரங்களைக்) கூறிவிட்டுத் தமிழில் ஆணையிட்டுச் செயல்புரிய வைக்கின்றனரோ அதே பாணியைப் பின்பற்றி, ஒவ்வொருவருக்கும், தனித்தனியே மதுவைக் குடிக்கும் பழக்கத்தையும், புகை பிடிக்கும் பழக்கத்தையும் வேத மந்திரம் முழங்க நிறைவேற்றி வைக்கின்றார்.

எந்த இடத்திலும் அந்தக் குடும்பம் அய்யரா, அய்யங்காரா என்று அவர் கூறவில்லை. ஆனால் தனி நடிப்பில் வந்த அவர் உரையாடல் மூலம் அமெரிக்காவில் குடியேற இருந்த அந்தக் குடும்பம் பார்ப்பனக் குடும்பம், வைதிக நெறியைப் பின்பற்றும் குடும்பம் என்பதை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தினார் சின்னி.

நிகழ்ச்சி முழுவதும் நகைச்சுவை பொங்கி வழிந்தது.

இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்ட ஒருவாரத்திற்குள் பார்ப்பனக்கும்பல் போர்ப்பறை கொட்டியது. நடிகர் வீட்டு முன்பும், சன் தொலைக்காட்சி முன்பும் ஆர்ப்பாட்டம் செய்ய நாள் குறித்து அறிக்கை விட்டது.

உடனடியாக நடிகரும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளரும் வருத்தம் தெரிவித்ததால் போராட்டத் திட்டம் கைவிடப்பட்டு விட்டது. 'விதைக்காது விளையும்' கழனியின் சொந்தக்காரர்கள், போராடாமலேயே வெற்றிக் கனியைப் பறித்து விட்டனர்.

இது அவர்கட்கு மட்டும் எப்படிச் சாத்தியமாயிற்று என்று எண்ணிப் பாருங்கள்.

மாநகரம் நடுங்கக் கும்பலைக் கூட்டக் கூடிய மற்றவர்களால் ஏன் இவ்வாறு வெற்றிபெற முடியவில்லை என்பதையும் எண்ணிப் பாருங்கள்.

தமிழ்நாட்டில் பல்வேறு சாதிச் சங்கங்கள் பல்

படிப்பகம்

www.padippakam.com



வேறு இடங்களில் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பல பேரணிகளை நடத்தியுள்ளன. வன்னியர்கள், தலித்துகள், முக்குலத்தோர்கள், யாதவர்கள், கம்மவார்கள், கொங்கு வேளாளர்கள், செங்குந்தர்கள், பழங்குடியினர், நாடார்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் போன்றோர் நடத்திய பேரணிகள் ஒவ்வொன்றிலும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இன்னும் வேறு நூறு சாதியினராவது மாநாடுகளையும், பேரணிகளையும், ஆய்வுக் கூட்டங்களையும் நடத்தி இருக்கக் கூடும்.

பேரணி நடத்திய ஒவ்வொரு சாதிச் சங்கத்தினரும்,

'இந்தப் படை போதுமா?
இன்னும் கொஞ்சம் வேணுமா?'
என்று முழங்குவது வாடிக்கை.

அப்பேரணிகளின் ஏற்பாட்டாளர்கள் கையில் இதழ்கள் இருந்தால், 'பார் சிறுத்ததோ, படை பெருத்ததோ' என்று பாராட்டும் அளவிற்கு மக்கள் கூடினார்கள் என்றெல்லாம் எழுதுவது வழக்கம்.

இவர்களெல்லாம் இலட்சக் கணக்கான மக்களைக் கூட்டி, ஊர்வலம் சென்ற தடத்தை அதிர வைத்து எதைச் சாதித்தார்கள் என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் இறுதியில் மிஞ்சுவது ஏமாற்றமாகவே இருக்கும்.

இலட்சக் கணக்கானோரைத் திரட்டிப் பேரணி நடத்தியும், அதில் சிலரை விபத்தில் பலிகொடுத்தும், சில சமயங்களில் காவல்துறை நடவடிக்கைகட்கு ஆட்பட்டும், கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்தும், பார்ப்பனர் அல்லாத சாதியினர் நடத்தும் போராட்டங்களால் சாதிக்க முடியாத ஒன்றினை - கோரிக்கை நிறைவேற்றம் என்கிற வெற்றிக் கனியைப் பறிக்க முடியாத ஒன்றினை-

வெறும் போராட்ட அறிக்கை மூலம், அதுவும் அறிக்கை வந்த இதழ்களின் மை உலரும் முன்பே வெற்றியாகப் பார்ப்பனர்கள் பெறுவதற்குக் காரணம் என்ன?

படை பலமா?
பண பலமா?
ஆட்சி அதிகாரமா?
அல்லவே அல்ல.

இவை அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் சக்தி வாய்ந்தவையாக உள்ள கருத்துப் பரப்பும் கருவிகள் - கருத்துப்பரப்பு ஊடகங்கள் மீது பார்ப்பனர்கள் பெற்றிருக்கும் பேராதிக்கமே காரணமாகும்.

இன்றைய நிலையிலும் பார்ப்பனர்கள் பத்திரிகைகள் முதலான கருத்துப் பரப்பும் கருவிகளைத் தம் ஆதிக்கத்திலேயே வைத்துள்ளனர்.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வானொலி, தொலைக் காட்சி முதல் தனியார் தொலைக் காட்சி நிறுவனங்கள் மற்றும் வெகுமக்களிடையே கருத்துக்களை உருவாக்கும் பத்திரிகை ஊடகங்கள், ஏனைய கலை வடிவங்கள் ஆகிய அனைத்தின் மீதும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் தொடர்ந்து வலிவோடும், பொலிவோடும் இருந்துகொண்டே இருக்கின்றது.

மாநில அரசுகளிலாகட்டும், மய்ய அரசிலாகட்டும் ஆளும் கட்சி எதுவாயினும் உயர் அதிகார வர்க்கம் பார்ப்பன மயமாகவே உள்ளது; அல்லது பார்ப்பன மேலாதிக்கத்தை ஒத்துக் கொண்டவர்களாக இந்த உயர் அதிகார வர்க்கம் மனமாற்றம் பெற்றுள்ளது.

ஒரு காலத்தில் பார்ப்பனர் கையிலுள்ள தர்ப்பைப் புல்லே மிகவும் வலுவான ஆயுதம் என்று கூறப்பட்டது. அந்தத் தர்ப்பை தன்னுடைய ஆற்றலை இழக்கும் முன்னரே அதற்குத் துணையாகவும், அதைவிட வலிவுள்ளதாகவும் உள்ள 'கருத்துப் பரப்பும் சாதனங்களின்' மீதான ஏகபோக உரிமையைப் பார்ப்பன - பனியாக் கூட்டம் தனதாக்கிக் கொண்டு விட்டது.

பார்ப்பன - பனியாக் கும்பலுக்கு வெளியே இருப்போர் நாள் ஏடுகள், பருவ ஏடுகள் நடத்தாமல் இல்லை. அவற்றுள் சில பார்ப்பன ஏடுகளை விட அதிக எண்ணிக்கையில் விற்கப்படுகின்றன. ஆனால் இவை இனமானம், மொழிமானம் எல்லாவற்றையும் பணத்துக்கு விலை கூறிவிட்டன.

திரைப்படம், சின்னத்திரை இவற்றில் பார்ப்பனர் அல்லாதோர் இல்லாமல் இல்லை.

ஆனால் இவர்கள் எந்த ஊடகத்தில் வேலை செய்தாலும் 'காசேதான் கடவுளடா' என்று அலைகின்றனர். தங்களது உள்சாதி அபிமானத்தைத் தவிர மற்ற எதை வேண்டுமென்றாலும் விட்டுக் கொடுத்துச் சமரசம் செய்து கொண்டு விடுகின்றனர்.

தமிழையோ, தமிழனையோ, தமிழ் இலக்கியத்தையோ, பண்பாட்டையோ குறை கூறி, கிண்டல் செய்து, தரக்குறைவாகச் சித்திரித்து அச்சு ஊடகத்திலும், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியவற்றிலும் தொடர்ந்து நாள்தோறும் எதையாவது நாம் படிக்கவும், கேட்கவும், பார்க்கவும் நேரிடுகின்றது. ஆனால் பார்ப்பனர் அல்லாதார் அதுபற்றிக் கவலைப்படுவதில்லை, எதிர்ப்புத் தெரிவிப்ப

படிப்பகம்

www.padippakam.com



தில்லை; எதிர்ப்புத் தெரிவித்தாலும் அது எடுபடுவ தில்லை.

எனவே கருத்துப் பரப்பும் ஊடகங்களில் வெற்றி கரமாகத் தமது இடத்தை உறுதிப்படுத்திக் கொண்டி ருக்கும் பார்ப்பனர் அல்லாதோரிடையே தம் சொந்த வருமானம், சொந்த நலன், சுயசாதி நலன் ஆகியவற் றின் மேல்மட்டும் உள்ள பற்றுடன் நின்றுவிடாமல், ஒட்டுமொத்தத் தமிழர் நலனுக்குமாக ஏடு நடத்தவும், தாம் கையாளும் ஊடகத்தைப் பயன்படுத்தவும் தயாரா கும் மனநிலையை உருவாக்க வேண்டியது தலையாய பணியாகும்.

ஏனெனில் ஊடகங்களின் வலிமையைக் கண்டு ஆட்சியாளர்கள் நடுங்குகின்றனர்; அரசியல் கட்சிகள் அலறுகின்றன; அதிகார வர்க்கம் அஞ்சுகின்றது. என வேதான் அவர்களால் எதை வேண்டுமென்றாலும் சாதித்துக் கொள்ள முடிகின்றது.

இந்த ஆயுதங்களைக் கையிலெடுக்கப் பார்ப்ப னர் அல்லாதோர் இன்னமும் பயப்படுகின்றனர்; கையிலெடுத்தோரும் அதைத் துருப்பிடிக்க வைத்து விட்டனர்; பயன்படுத்துவோரும் அதனைத் தவறான முறையிலேயே பயன்படுத்துவோராகவே உள்ளனர்.

எனவே பார்ப்பனர் அல்லாதோர் தன்மானம் பெறவும், தமிழர் நிலை உயரவும், தமிழ்மொழி வாழவும், தமிழ்ப் பண்பாடு பேணப்படவும், இன இழிவு நீங்கவும் உடனடியாகக் கருத்துப் பரப்பும் ஊடகங்களைத் தமிழர்கள் பெருமளவிற்குத் தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டும். அதனை, மேற்கண்ட காரணங்களுக்காகத் தொடங்க வும், பயன்படுத்தவும் முன்வர வேண்டும்.

இவற்றிற்கான முயற்சிகளை உடனடியாக மேற் கொள்ள வேண்டும்.

படித்த - பட்டம் பெற்ற ஆசிரியர், அலுவலர், வழக்குரைஞர், மருத்துவர், வணிகர் கூட்டம் இதுபற் றித் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும்.

# பேராசிரியர் சாலய் இளந்திரயன் அறக்கட்டளை

## அன்பான வேண்டுகோள்

திருவள்ளுவராண்டு 2029 நளித் திங்கள் 4 ஆம் நாள் (20.11.1998) பேராசிரியர் சாலய் இளந்திரயன் அறக்கட்டளை நிறுவப்பட்டது.

முனைவர் சாலய் இளந்திரயன் தில்லிப் பல்க லைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிக் கவிதை, உரைவீச்சு, உரைநடை ஆகியவற்றின் மூலம் இலக்கியவாணராகவும், தமிழ் - தமிழர் நலத்திற்கும் அறிவுவளப் பொதுமை நலத்திற்கும் தொண்டாற்றும் பொதுநலத் தொண்டராகவும் தனக்கென்று தனி இடம் பெற்றவர். 2029 ஆம் ஆண்டு கன்னித் திங்கள் பதினெட்டாம் நாள் (4.10.1998) அவர் காலமானதை ஒட்டி, நண்பர்கள், இலக்கியவாணர்கள் மற்றும் குடும்பத்தினர் விருப்பத்திற்கிணங்க அவரது நினை வாக அவரது பெயரில் 'பேராசிரியர் சாலைய் இளந்தி ரயன் அறக்கட்டளை' நிறுவப்பட்டுள்ளது.

தமிழ், தமிழர் நல வளர்ச்சிக்கான பல்வேறு பணிகளை நோக்கங்களாகக் கொண்ட இந்த அறக்கட் டளை முதலில் சாலையாரின் நூல்களை முறையாகப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அவரு டைய நூல்களில் பல இன்று விற்பனைக்குக் கிடைக் கவில்லை. அவை திரும்ப வெளியிடப்படுதல் வேண் டும். இன்னும் அச்சுக்குக் காத்திருக்கும் பல நூல்க ளும் இருக்கின்றன. வரலாற்றுப் பெட்டகமாகத் திக ழும் நினைவுமலர் ஒன்றும் வெளிவர இருக்கிறது. இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக அறக்கட்டளை யின் மூலதனத்தைப் பெருக்க வேண்டியுள்ளது. எனவே, அதில் உங்கள் பங்களிப்பை விரைந்து செய்யுமாறு அன்புரிமையோடு கேட்டுக் கொள்ளுகி றேன்.

இந்த அறக்கட்டளை வருமானவரிச் சட்டத்தின் படி பொதுநிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (S.I.No.311/98-99) வரிவிலக்குச் சலுகை பெற விண்ணப்பித்துள்ளோம். விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

உங்களுடைய நன்கொடையைப் பணமாகவோ கோடிட்ட காசோலையாகவோ அல்லது வரைவோலை யாகவோ அனுப்பலாம். காசோலையும், வரவோலை யும் 'பேராசிரியர் சாலய் இளந்திரயன் அறக்கட்டளை' என்ற பெயருக்கு அனுப்பப்பட வேண்டும்.

உங்கள் ஒத்துழைப்பை மிக விரும்பி எதிர்பார்க்கி றோம்.

அன்புள்ள

**சாலினி இளந்திரயன்**
பேராசிரியர் சாலய் இளந்திரயன்
அறக்கட்டளைக்காக.

படிப்பகம்

www.padippakam.com



# ஆசிரியருக்கு...

## தென்மாவட்டத்தில் பணி தொடரட்டும்!

தங்களின் சிந்தனையாளன் கடந்த 1½ வருட காலமாக திருச்சிக்கு வரும்போது வாங்கிப் படித்து வருகிறேன். மிக்க தரமான படைப்புடன் வெளிவந்து கொண்டு இருக்கிறது. அதில் எனக்குப் பிடித்த பகுதி ஆசிரியர் தலையங்கமும், சங்கமித்ராவின் பகுதியும். நல்ல இதழ். எனவே இதனைத் தபாலில் பெற விரும்பி D.D. ரூ.60-க்கு ஒரு ஆண்டுக்கு எனக்கு சிந்தனையாளன் இதழ் அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் சிந்தனையாளன் வளர்ச்சி நிதிக்கு ரூ.100/-ம் அனுப்பி உள்ளேன். பெரம்பலூர் மாவட்ட மாநாட்டில் நான் நேரில் கலந்து கொண்டேன். மிகவும் அருமையாக மாநாடு நடைபெற்றது. அப்போதுதான் தங்களை முதலில் பார்த்தேன். முதிர்ந்த வயதிலும் சுறுசுறுப்பாக மாநாட்டை நடத்தியது எனது மனதில் பதிந்து உள்ளது. பொங்கல் மலர் வாங்கியும் வந்தேன். தங்கள் பணி தென் மாவட்டத்திலும் பரவுதலுக்கு ஏற்பாடு செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அரிமளம், செ. நாகப்பன்,
18.2.99

## நிலைதான் மாறாதோ!

''மதம், சாத்திரம் இவற்றை சமூக அமைப்பு மற்றும் அரசு பாதுகாக்கின்றன. இந்தப் பாதுகாப்பை அடியோடு உடைத்தெறிய வேண்டும். அதன் பிறகே பெண் விடுதலை வந்து சேரும்'' - ஆசிரியர் வே. ஆனைமுத்துவின் முத்தாரமான இவ்வார்த்தைகள் இன்றைய சமூக அமைப்பு பெண்களின் நிழலாகத் தொடர்ந்து வரும் போலியான பாதுகாப்பு என்பதையும் சிறகிருந்தும் சிறையாக்கப்பட்டிருக்கும் பெண்களின் அவலத்தையும் விளக்குகின்றன. அற்புதம்!

சங்ககிரி திருமதி. க. ஜெயமணி,

## வருந்தி என்ன பயன்?

மார்ச்சு 1999 சிந்தனையாளன். இதழ் கண்டேன். 'அறிவுலகத்தில் அறிஞர் வசந்தா படும்பாடு' என்ற கட்டுரை கண்டு பெரிதும் வருந்தினேன்.

அவரைப் பற்றிய அறிமுகத்தை சிந்தனையாளன் தொடங்கி வைத்ததே சிறப்புதான். வசந்தா அவர்கள் இன்னும் சிந்திக்க வேண்டும். எங்கே தகுதிக்கு மதிப்பில்லையோ அங்கே தங்கி என்ன சாதித்தாலும் அதனால் பெரும்பயன் கிட்டிவிடப் போவதில்லை. இங்கே இருந்து கொண்டே, 'உண்மையான உழைப்புக்கும் திறமைக்கும் இங்கே ஆதரவும் அங்கீகாரமும் இல்லாததுதான் வருத்தமளிக்கிறது' என்று வருந்திக் கொண்டிருப்பதில் என்ன பயன்? வழக்காடிக் கொண்டிருப்பதில் பொருளும் நேரமும்தான் விரயம்? உங்கள் திறமை சிதறியடிக்கப் படவேண்டுமா?

பெங்களூரிலிருந்தும், திருவனந்தபுரத்திலிருந்தும் வந்த அழைப்பை ஏற்றுச் சென்றிருக்கலாமே! இப்படித் தூண்டுவதும் சிந்தனையாளனின் பணிகளில் ஒன்றுதான்.

அத்துடன், அய்.அய்.டி.யில் இத்தனை எதிர்நீச்சலுக்குக் காரணம் இவர் பார்ப்பனர் அல்லாத இனத்தைச் சார்ந்தவர் என்பதாகத்தான் இருக்க முடியும்!

சவுண்டிக் கூட்டத்திலிருந்து வந்திருந்தால், ''ஆகா! ராமானுஜத்திற்குப் பின்னால் வந்த கணக்கு மேதையைப் பார்'' என்று வானுயர வாழ்த்தப் பெற்றிருப்பார். தமிழச்சிதானே!

பீகாரில் 'தாழ்த்தப்பட்டோர் படு கொலைகள்' பற்றிய தலையங்கம் எழுதியது மிகச் சரியான மனித நேயத் தொண்டு. சிந்தனையாளன் முயற்சியில் அப்படி ஒரு குழு பீகார் செல்ல நேர்ந்தால் அக்குழுவில் நானும் இடம் பெறத் தயாராக இருக்கிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமானூர்
9.3.99 டாக்டர் அரி.கா.பிச்சை

## மாவீரர் நாள்: எழுதியவர் யாரோ!

'மாவீரர் தின'த்திற்கான கவிதையை சிந்தனையாளன் இதழில் வெளியிட்டமைக்கு உளமார்ந்த நன்றிகள்.

அக் கவிதையை 'துண்டுப் பிரசுரமாக நான் படித்தேன். மனதைப் பறிகொடுத்தேன். கவிஞர் பெயர் அத் துண்டறிக்கையில் இல்லை!

கவிதையின் இரசிகன் என்ற முறையில் மட்டுமே அதனை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். படைப்பாளி என்ற பெருமை எனக்கில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈரோடு. சிதம்பரன் கி.
20.2.99 வழக்கறிஞர்

படிப்பகம்

www.padippakam.com



## உயர் எண்ணங்கள்

சரியான சிந்தனையில் எழுத்து வரியான தமிழேந்தியின் கவிதை உரிய மக்களுக்குப் பயன்படும் உயர்வான எண்ணங்கள். பாராட்டுக்குரியனவே.

கு.ப. நாகரத்தினம்,
குன்னத்தூர்

## ரொம்ப நல்லாயிருந்துச்சு!

நான் தங்களது சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் படித்தேன். ரொம்ப நல்லாயிருந்துச்சு. மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெடுவாசல் சி. காந்தி
8.2.1999 ஆசிரியர்

## பாராட்டுக்கள்

தோழர் சங்கமித்ரா அவர்களின் 'இன்றே - இப்பொழுதே தொடங்குங்கள் வணிகம்' நூலுக்குத் தமிழக அரசின் பரிசு கிடைத்து இருப்பது மிகுந்த மகிழ்ச்சி. தமிழனைத் தனக்கு அடிமைப்படுத்திய பார்ப்பனர்களை அக்குவேறு, ஆணிவேறாக அலசி ஆய்வு செய்து அவர்களின் வண்டவாளங்களைத் தமிழர்களுக்குப் பல இதழ்கள் மூலமாகவும், நூல்கள் மூலமும் எழுதி வருபவர் சங்கமித்ரா அவர்கள். ஆண்டுதோறும் தமிழக அரசு கொடுக்கும் ''பெரியார் விருது'க்கு இவர் தகுதியானவர். நல்ல பெரியாரியச் சிந்தனையாளர்.

திருச்சி ந. கருணாகரன்
8.2.99

## அருமையான கட்டுரை

பிப்ரவரி மாத சிந்தனையாளன் இதழில் தோழர் இசையமுது அவர்கள் எழுதிய விழி, எழு... தோழனே! மிக அருமையான கட்டுரை. வரவேற்க வேண்டியவை. இதை எழுதியவர்க்கும், பிரசுரம் செய்தவர்க்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டு.

வேலூர் மு. மன்னார்
13.2.99

## சிந்தனையாளனுக்குப் பாராட்டு

நான் திருச்சி புனித சிலுவை கல்லூரியில் இரண்டாமாண்டு வேதியியல் பயில்கிறேன். நான் 5-3-99 அன்று எங்கள் வகுப்பில் நடந்த கருத்தரங்கில் ''இதழியலின் நோக்கில் சிந்தனையாளன்'' என்னும் தலைப்பில் பேசினேன். சிந்தனையாளன் இதழை அனைவருக்கும் அறிமுகப்படுத்தியதுடன், அதன் நோக்கம், கொள்கைகள், சிறப்புகள் ஆகியவற்றையும் விளக்கினேன். அவற்றை எல்லாம் வியப்புடன் கேள்வியுற்ற என் ஆசிரியரும், என் சக மாணவிகளும் என்னை மிகவும் பாராட்டினார்கள். அத்தகைய பெருமையை சிந்தனையாளனுக்கு உரித்தாக்குகிறேன்.

திருச்சி த. ரம்யா தேவி
10-3-99 த/பெ. அருணா. தர்மராசன்
பிச்சாண்டார்கோவில்.

## பெரியாரின் தொலைநோக்கு

பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாரின் தளபதி என்பதில் ஐயமில்லை. தன்னை பெரியாருக்கு ஒப்பிடுவதையோ, பெரியாரை விடப் பெரிது படுத்துவதையோ நிச்சயம் விரும்ப மாட்டார். யாரையோ திருப்திபடுத்த வேண்டி சில நேரங்களில் பெரியாரை விட அண்ணாவைப் பெரிது படுத்தும் தீமையைச் செய்து விடுகின்றனர்.

ஆங்கிலேயரிடமிருந்து இந்தியா விடுதலை பெறுவதில் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. துக்கநாள் என்று அறிவித்த பெரியாரின் கருத்தே வென்றது. இந்தியாவிற்கு விடுதலை அல்ல நிர்வாகம் தான் மாறியுள்ளது என்பதை அய்ம்பதாண்டுகள் முன்பே தீர்க்க தரிசனமாகக் கூறியது தான் இன்றைக்கு நடைமுறையில் உள்ளது. ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்ட நாள் என்று சொல்லிக் கொண்டாலும் அவர்கள் ஆட்சியில் மக்கள் பொருளாதாரத்தில், கல்வியில், வாழ்க்கை முன்னேற்றத்தில் விடுதலை இந்தியா என்று இப்போது சொல்லிக் கொள்ளும் காலத்தைவிட மோசமில்லை. கடந்த அய்ம்பதாண்டு சுதந்தர இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்கள் தான் அதிகமாகஉள்ளனர். பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக உயர்ந்துள்ளனர். சுதந்தரமாம் சுதந்தரம் சோற்றிக்கில்லாச் சுதந்திரம். யார் கேட்டது? பெரியாரின் கொள்கை இலட்சியத்தால் பயன்பெற்றவர்கள் தான் அவ்ரை மறந்து விட்டனர். தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் பெரியார் பெயர் மாவட்டந் தோறும் மட்டும் தொடரட்டும் என்று கூற மறந்த துரோகிகள் தானே? பெரியாரின் சிந்தனைகள் இனியாவது கிராமங்கள் தோறும் எதிரொலிக்கட்டும். முயல்வீர்

மேட்டுப்பாளையம். பி.ஏ. வதூத்,
*16.3.99*

படிப்பகம்

www.padippakam.com



# சங்கமித்ரா விடையளிக்கிறார்

? வேலைக்குச் செல்லும் பெண்களில் 90% நடத்தை கெட்டவர்கள் என்று காஞ்சிப் பெரியவர் அருள் வாக்கு அருளியிருப்பதைக் கவனித்தீர்களா?

கவிதா தமிழ்நேசன், கரிக்கலாம்பாடி

● கற்பக விருட்சம் போல காமதேனு போல, யானை போல, அன்னம் போல பார்ப்பனர்கள் உலவ விட்டிருக்கும் கற்பனை சரக்கு - கற்பு. பெண்களை அடிமைப் படுத்தி முட்டாளாக்கி வீட்டுக்குள் உட்கார வைப்பது ஒன்று தான் இந்த மனுநீதிச் சதித்திட்டத்தின் நோக்கம். பெண் கட்டுப்பாடு மீறினால் சாதி தருமம் கெடும் என்பது மனுநீதி. சங்கரமடத்துச் சவுண்டி - சி. ஜான் இராமன் நாவல்களைப் படிப்பது நல்லது. பதவிசாக பட்டுப் புடவைக்குள் கட்டுப்பெட்டிகளாக "கற்பு நிறை" பாப்பாத்திகளாக வீட்டுக்குள் இந்தப் பெண்கள் சோரம் போன கதைகள் தான் இவை.

? பீஹார் அரசு கலைக்கப்பட்டது நியாயம் தானா?

க. வள்ளிநாயகம், உடுமலை

● யார் கோணத்திலிருந்து பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. பீஹாரில் சட்டம் ஒழுங்கு இல்லை என்பது மிகப் பழைய வரலாறு. ஆனால் மத்தியில் ஆட்சி செய்த முன்னாள் சவுண்டிகளான காங்கிரசும், இந் நாள் கவுண்டிகளான பிஜேபியும் - தமக்குத் தேவை ஏற்படும் போது லாலுவை வளர்த்தும் அத் தேவை குறையும் போது லாலுவை அகற்றியும் செயல் படுகிறார்கள்.

? தேசீய விளையாட்டுப் போட்டியில் சுண்டைக்காய் மாநிலங்கள், மணிப்பூர், கேரளா எல்லாம் தாண்டி எட்டாவதாக பத்தாவதாக தமிழ்நாடு வந்திருப்பது அவமானம் இல்லையா?

எஸ். மணிமேகலை, நாகப்பட்டினம்.

● மான அவமானம் பற்றி கவலைபடாதவர்கள் தான் தமிழ் நாட்டை ஆளுகிறார்கள். அதன் ஒரு விளைவு தான் இதுவும். மாட்டிக் கொள்ளாமல் திருடுவது எப்படி என்று தேசீய விளையாட்டில் ஒரு போட்டி வைத்தால் தமிழக அரசியல்வாதிகள் பின்னணி எடுத்திருப்பார்கள். அது சரி. தமிழ்நாட்டை மட்டும் ஏன் சொல்லுகிறீர்கள்? தமிழ் நாட்டுக்கும் கீழே பீஹார், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் என்று "கௌ பெல்ட்" முழுதும் கிடக்கிறதே, அதைப் பார்க்கவில்லையா?

? குப்பைமேட்டைக் கிளறித் தேவையான பொருட்களை எடுத்துக் கொள்ளும் அளவுக்கு ரஷ்யாவில் ஏழ்மை முற்றி விட்டது என்று தினமலர் ஒரு படம் வெளியிட்டிருக்கிறதே. (தினமலர் திருச்சி - 24.2.99).

எஸ். டேவிட்.

● அது என்ன பெரிய செய்தி? தனி விமானம் அமர்த்திக் கொண்டு ரஷ்ய பெண்கள் டெல்லிக்கு வந்து, விபச்சாரம் செய்து பணம் சம்பாதிக்கிறார்கள் என்பது கம்யூனிசத்துக்குக் கிடைத்த மரண அடி. இதற்கு எதிரான 'முதலாளித்துவம்' செழிக்கும். அமெரிக்காவில் மட்டும் என்ன வாழ்கிறது? இதே விபச்சாரத்தை அவர்கள் உள்நாட்டிலேயே செய்கிறார்கள்.

? மீண்டும் காமராஜர் ஆட்சி என்று மூப்பனார் பேசி வருகிறாரே, செய்து விடுவாரா?

எஸ். ராஜ்மாணிக்கம், அரக்கோணம்.

● காமராசர் தந்த கட்சியையே, அவர் மறைவுக்கு பிறகு பொட்டலம் கட்டி அள்ளிச் சென்று இந்திராவின் காலடியில் சமர்ப்பித்த உலகமகா எத்தர் மூப்பனார் காமராஜர் பெயரில் நடக்கும் அரசியல் பிராய்வுகளில் மூப்பனாருடையதும் ஒன்று, வேறு எதுவும் இல்லை.

? ஊழல் என்று சொல்வதை விட 'திருட்டு' என்று வெளிப்படையாகச் சொல்லலாம் என்று சோ. ராமசாமி சொல்லியிருக்கிறாரே?

எஸ். குணமாலை, தூத்துக்குடி.

● ரொம்ப கரைக்ட். திருட்டு வேலையை ஒரு சாதித் தொழிலாக இந்த நாட்டில் பரப்பியவர்கள் பார்ப்பனர்கள் தானே! "உணவை உற்பத்தி செய்ய முடியாதவர்கள், உணவு உற்பத்தித் தொழிலில் உதவியாக இருக்க முடியாதவர்கள், உணவைப் பிச்சை எடுத்தார்கள் - அல்லது 'திருடினார்கள். இந்தியப் பார்ப்பனர்கள் இரண்டையும் செய்தார்கள்" என்கிறார் சரித்திர நிபுணர் டிடி. கோசாம்பி. பார்ப்பனர்கள் செய்த யாகம், யக்ஞம், திதி, திவிஷம் - எதில் அரிசி விளைந்தது? எல்லாம் திருட்டுத் தானே? அதாவது தமக்கே 'காப்பிரைட்' ஆகிப் போன திருட்டுத் தொழிலை மற்றவர்கள் செய்யும் போது தான் சோ போன்ற திருட்டுப் பாரம்பரிய வம்சாவழியினர் 'அய்யோ அய்யோ' என்கிறார்கள்.

? கேஸ் ஏஜென்சி ஒதுக்கீட்டில் கூட பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உரிய பங்கை அதிகாரபூர்வமாக வழங்கியிருக்கும் வாழப்பாடி ராமமூர்த்தி பாராட்டுக்குரியவர் தானே?

பா. அருட்கலை, சேலம் - 7.

● வாழப்பாடியிடம் மிகவும் பாராட்டத்தக்க இரண்டு தன்மைகள் உண்டு. 1. எந்தக் கட்சியில் இருந்தாலும் அவர் மறக்காத திராவிட இயக்க வேர்கள். 2. என்ன உயரத்துக்கு போனாலும் அவர் தவிர்த்து விடாத 'பிற்படுத்தப்பட்டோர் நலன்'.

படிப்பகம்

www.padippakam.com



# பலரும் பாராட்டுகிறார்கள்! ஆனால், பணி தொடர வேண்டுமே!!

மண்டல் பரிந்துரை என்றாலே அது மா.பெ.பொ.க. வின் தொடர்ந்த உழைப்பினால் கிட்டியது என்பதைப் பலரும் அறிந்திருக்கிறார்கள்; சிலர் நம் தோழர்களிடமே இதைச் சொல்லுகிறார்கள்.

★ உண்மையில் 29.4.1978 முதல் 6.5.1982 முடிய 100க்கு 100 பங்கும் நம் கட்சியினரின் உழைப்பே இதற்கு அடித்தளமாக அமைந்தது. 1982க்குப் பிறகு இடஒதுக்கீட்டில் பற்றுள்ள நாமும், மற்றும் பல அமைப்பினரும் தத்தம் பங்களிப்பைச் சரியாகவே செய்தனர். இதற்கான வெற்றி, நடைமுறையில், 1993 லேதான் கிட்டியது.

★ மா.பெ.பொ.க.வின் முதலாவது சாதனை - பீகார் மாநிலப் பிற்படுத்தப்பட்டோருக்கு, முதன் முதலாக, அரசு வேலையில் 20% இட ஒதுக்கீட்டினை 31.10.1978ல் பெற்றுத் தந்ததே ஆகும்.

இதன் உடனடித் தாக்கமாகத் தான், வடக்கே அரியானா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் முதலான மாநிலங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு தரப்பட்டது.

★ தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டு வந்த 31% இட ஒதுக்கீட்டை, 60% ஆக உயர்த்தித் தர வேண்டுமென 1979 ஆகஸ்டில் எழுத்து மூலம் எம்.ஜி.ஆரிடம் கோரிய ஒரே அமைப்பு மா.பெ.பொ.க.

இதற்கென மா.பெ.பொ.க. சார்பில் எல்லாம் செய்தவர்கள் சேலம் அ. சித்தய்யன், வே. ஆனைமுத்து இருவரும்; அ.இ.அ.தி.மு.க. சார்பில் எல்லாம் செய்தவர்கள் பண்ருட்டி ச. இராமச்சந்திரன், எம்.ஜி. இராமச்சந்திரன் இருவரும்.

1.2.80 முதல் தமிழகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 50% வரச் செய்ததற்கு அடிப்படை மா.பெ.பொ.க. என்பது நூற்றுக்கு நூறு உண்மை.

இத்துணை முயற்சிகளுக்கும் இடையறாது ஈடுகொடுத்த ஒரே ஒரு ஏடு "சிந்தனையாளன்". இன்று, இது 25 ஆவது ஆண்டை எட்டியிருக்க வேண்டும். இடையில் வந்த இன்னல்களால் — பணமுடையால் — நொடிவால் இன்னமும் 21 ஆம் ஆண்டிலேயே "சிந்தனையாளன்" நடைபோடுகிறது.

இதுவே பெரிய வெற்றி எனப் பலரும் பாராட்டுகின்றனர்.

பாராட்டுவோரில் சிலர் ஏட்டின் வளர்ச்சிக்கு எல்லாம் செய்கின்றனர்.

ஆனால் இந்திய, தமிழகப் பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும், பழங்குடியினரும், மதச் சிறுபான்மையினருமான ஒடுக்கப்பட்ட வகுப்பு ஆசிரியர், அலுவலர், வழக்குரைஞர், மருத்துவர், வணிகர், செல்வந்தர் என உள்ளோர். அவரவர் போதிய பங்களிப்பைச் செய்துள்ளார்களா என அன்பு கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப் பலரையும் எண்ணிப் பார்க்கும்படிச் செய்திட, நாம் — நம் மா.பெ.பொ.க. பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உடனடியாக முழுமுயற்சியோடு ஈடுபட வேண்டும்.

மாதந்தோறும் ஏதாவது ஒரு சனி, ஓர் ஞாயிறு என இரண்டு நாள்களை இப் பணிக்காகவும், கட்சிப் பொறுப்பாளர்கள் கட்சியைக் கட்டும் பணிக்காகவும் கட்டாயம் ஒதுக்க வேண்டும்.

இந்தப் பெரிய சுமையுடன், அறிஞர் எஸ்.ஏ. டேவிட் அவர்களின் உந்துதலால தொடங்கப்பட்ட ஆங்கில மாத ஏடு **"Periyar Era"** முதலில் உழைப்புச் சுமையையும், அடுத்துப் பணச் சுமையையும் நமக்குக் கூட்டி விட்டது.

ஆங்கிலத்தில் ஒரு மாத ஏடா? அய்ந்தாண்டுகளாக நடத்துகிறீர்களா? எனக் கேட்டு வியப்படையும் நல்லவர்கள் பலர் உள்ளனர். எப்படியேனும் தொடர்ந்து நடத்துங்கள் - தரமான ஏடாக இருக்கிறது - ஆங்கிலத்தில் இவ்வளவு தரமான ஓர் ஏடு பெரியார் கொள்கைக்கு இப்போது இல்லை - எங்களாலான ஆதரவுகளைத் தர ஆயத்தமாக உள்ளோம் எனக் கூறிச் செயல்பட முன்வந்தோர் சிலர். இவர்கள் அனைவரும் நம் பாராட்டுக்கு உரியவர்கள்.

இவ்வளவு துன்பமான முயற்சிகளை மேற்கொண்டுள்ள நமக்கோ பாராட்டுகள் மட்டும் போதுமா? வாய் வாழ்த்தும், பாராட்டும் ஒருவருடைய உள்ளத்தை மகிழ்விக்கும்; ஆனாலும், வாழ வைக்க வாழ்த்து மட்டும் போதாது. பணிதொடரவும் உதவ வேண்டுமே!

பாராட்டுவோரை - நம்மை வாழ்த்துவோரை அணுகி அவர்களுள் ஒவ்வொருவரும் அந்த இரண்டு ஏடுகளுக்கும் பங்களிப்புச் செய்திட — கட்டணம் செலுத்திட, வளர்ச்சி நிதி அளித்திட, வாழ்நாள் உறுப்பினர் ஆகிட நாம் தான் - நம் தோழர்கள் தான் முயல வேண்டும்.

அருள் கூர்ந்து முயலுங்கள்; தொடர்ந்து முயலுங்கள் என அன்புடன் வேண்டுகிறேன்.

1.4.99

**வே. ஆனைமுத்து**

படிப்பகம்

www.padippakam.com



# களப்பணி

களப்பணியில் ஈடுபடும் மா.பெ.பொ.க. - தோழர்கள், பாவேந்தர் கலை இலக்கிய மன்ற உறுப்பினர்கள், இன்னும் ஆர்வலர்கள் - அவர்களின் களப் பணி விவரங்களை இப்பகுதிக்கு எழுதலாம்.

— ஆசிரியர்

23.2.99 அதிகாலை 4 மணிக்கு எழுந்து, அய்ந்து மணி பேருந்தைப் பிடித்து செயம் கொண்டத்துக்குப் பயணம். மா.பெ.பொ.க - பெரம்பலூர் மாவட்டத்தை வளர்ச்சிக் கண்காணிப்புக்குத் தேர்வு செய்தது ஒரு காரணம். சனவரி, 2-ல் - செயம்கொண்டத்தில் பொங்கல் மலர் வெளியீடும், கட்சி மாநாடும் நடந்த போது தோழர்கள் காட்டிய உற்சாகம் இன்னொரு காரணம். Always for the Under Dog - (எப்பவும் மிதிபடுகிறவன் கட்சியே) என்ற என் மனநிலை முக்கிய காரணம். உலகத்தின் மோசமான ஏழைகள் பெரம்பலூர் மாவட்டத்தில் தான் இருப்பார்களோ? எனக்கு பெரம்பலூர் மாவட்டத்தை 'ரொம்பப் பிடிச்சு போச்சு'.

**டாக்டர் ந. மாசிலாமணி**

எனது அரிய நண்பர் டாக்டர் மாசிலாமணியை அவர் வீட்டில் தேடினேன். அவர் தா.பழூர் - மருத்துவ நிலையத்துக்குப் போய் விட்டார். எனக்கு வேண்டிய சோறு குழம்பு மட்டும் மேசையில் இருந்தன. சாப்பிட்டு விட்டு என் 'துணிக்கடைப்பை'யுடன் (தண்ணீர், டவல், புத்தகங்கள், விநியோகிக்க சிந்தனையாளன் இதழ்கள்) கட்டு நடையை - தா. பழூருக்கு.

**பேசிச் சிரிக்க கிளினிக் வாருங்கள்**

'பேசிச் சிரிக்க என் மருத்துவமனைக்கு வாருங்கள்' என்று மருத்துவமனை நடத்துகிறார்கள் இரண்டு பேர் - ஒருவர் டாக்டர் பூவராகன் பழநியப்பன்; இன்னொருத்தர் நடராசன் - மாசிலாமணி! ஹாயாக சாய்வு நாற்காலியில் படுத்து 'ஒன்பது ரூபாய் நோட்டு' படித்துக் கொண்டிருந்தார். வாசலில் நின்று ஒரு அட்டகாசச் சிரிப்பு சிரித்தேன். அவர் திரும்பவே இல்லை. நிறைய பேர் இங்கு வந்து இப்படி சிரிப்பார்களாக இருக்கும். கிளினிக் அப்படித்தான் இருக்கிறது - தெருக்கதவு, கொல்லைக் கதவு எல்லாம் திறந்தபடி. 'சார்' என்றேன். புத்தகத்திலிருந்து தலை நிமிர்ந்தது.

**எட்டாவது அதிசயம்**

சங்கமித்ரா - தா. பழூரில் - அதுவும் என் கிளினிக்கில் - குபீர் என்று எழுந்து நின்றார். கண்களைக் கசக்கிக் கொண்டார். 'என்னால் நம்பவே முடியவில்லை' என்றார். 'எது, கிளினிக்குக்கு ஜனங்கள் வருவதா?' என்றேன். சிரித்தார். (இத்தனைக்கும் இங்கே இலவச வைத்தியமே அதிகம்). உடனே என்கூட வர தன்னை ஆயத்தப்படுத்தினார். பத்திரமாக செயங்கொண்டத்திலிருந்து காரில் சுமந்து வந்திருந்த மூன்று இட்லிகளை விழுங்கினார். புறப்பட்டு விட்டோம்.

**ஒரு தலைமை ஆசிரியரை...**

எங்கள் முதல் சந்திப்பு ஒரு தலைமை ஆசிரியருடன். தா. பழூர் மேனிலைப்பள்ளி தலைமை ஆசிரியர். மிக நல்லவர். என்னை அறிமுகம் செய்து விட்டு டாக்டர் நழுவி விட்டார் (ஆசை ஆசையாக இந்தப் பள்ளிக்கூடத்தில் அவர் நட்டமே - பூக்கள் மரக்கன்றுகளில் சில செத்து விட்ட துயரம் அவருக்கு). பெரம்பலூர் மாவட்டத்தில் மிகப் பெரிய அதிசயம் - இங்குள்ள பெரும் எண்ணிக்கையிலான பள்ளிகளும் ஆசிரியர்களும்தான். (உபயம்: காமராசர் காலத்தில் கொடுக்கூர் விசுவநாதன் - கணபதி - ஆனைமுத்து குழுவினரின் களப்பணி.) தலைமை ஆசிரியர் மிக அன்புடன் உபசரித்து ஊர் பற்றிய அனைத்து விவரங்களும் தந்தார். சிந்தனையாளன் இதழ்களைக் கொடுத்து - ஆண்டு சந்தா - ஆயுள் சந்தா - எதிலாவது அஞ்சு - என்று கெஞ்சினேன். ஆசிரியர் நெகிழ்ந்து போனார். எப்படியும் செய்வதாகச் சொன்னார். (மாசிலாமணி சார் - கொஞ்சம் நினைவு படுத்தி சந்தா வாங்கி அனுப்புவீர்களா?)

**ராசி மெடிக்கல்ஸ்**

பெண்களே நிர்வகிக்கும் ராசி மெடிக்கல்ஸில் டாக்டர் எனக்காகக் காத்திருந்தார். உரிமையாளர் இருக்கையில் உரிமையோடு அமர்ந்தபடி. வந்தவர்களுக்கு மருத்துவ ஆலோசனை இலவசமாகவும் மருந்து காசுக்கும் கிடைத்தன. ராசி மருத்துவமனை ஒரு ஆயுள் சந்தா தருமா?

**முதல்நிலை மாணவர்களுக்கு ரொக்கப்பரிசு**

தா. பழூர் ஒன்றியத்தின் பத்துக்கு மேற்பட்ட பள்ளிகளில் 10ஆம் வகுப்பு - முதனிலை மாணவர்களுக்கு ரூ.500 ஊக்கப் பரிசு சென்ற சில ஆண்டுகளாக டாக்டர் மாசிலாமணி வழங்கி வருகிறார். ஓசையில்லாத இந்த மக்கள் தொண்டு என்னை அசத்தியது. 'முதனிலை மாணவர் பேட்டி' என்று ஓர் ஆய்வு நான் நடத்துவது ஊர் அறிந்த செய்தி. உடனே ஒரு பேட்டி படிவம் எழுதி ஜெராக்ஸ் எடுத்து 30 கவர் வாங்கி ஸ்டாம்ப் வாங்கி - ஒட்டிப் போட்டோம்.

படிப்பகம்

www.padippakam.com



### கொஞ்சம் வைத்தியம்

செயங்கொண்டம் திரும்பும் முன்பு டாக்டர், கிளினிக் ஊழியர்களையும், நோயாளிகளையும் ஒரு சுற்றுப் பார்த்துவிட்டுத் திரும்பினார். 'அம்பாசிடர் வண்டி - செயங்கொண்டம் நோக்கிப் பறந்தது. மாலை 6 மணி. நேராக - தோழர் காமராஜை (தி.க - மாவட்டத் தலைவர்) சந்திக்கப் போனோம். ஆள் அகப்படவில்லை. பெயர் விவரம் ஞாபகம் வைக்க முடியாத பல பிரமுகர்களைச் சந்தித்தோம் (பணம் கொடுத்தால்லே - ஞாபகம் இருக்கும்?)

இரவு 10 மணி.

### லாட்ஜுக்கு மூட்டை

டாக்டருக்கும் அவருடைய 24 மணி நேர உழைப் பாளி மனைவி டாக்டர் அம்மையாருக்கும் தொந்தரவு கொடுக்காமல் இருக்க லாட்ஜுக்குப் போய்விடுவதா கச் சொல்லி இருந்தேன். அப்படியும் மூன்று நாட்க ளுக்கு வேண்டிய மீன் குழம்பும் வறுவல்களும் எனக்காகச் செய்து பிரிட்ஜில் வைத்து விட்டார்கள். பிறகு என்ன? வெட்டுடா வெட்டு. இரவு லாட் ஜுக்கே இரும்புலிகுறிச்சி சிகோ வந்து விட்டார்.

### 24.2.99 - அதிகாலை

மோட்டார் சைக்கிளில் நடைக்கு போகும் டாக் டர் (அது நடை இல்லை சாமி! ஊர்வலம். கட்சி வேலை. டாக்டர் மாசிலாமணி காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர்) காலையில் வந்து விட்டார். இரவு 3 மணிக்கே சிகோ ஊருக்குப் போயிருந்தார். மீண்டும் பிரபலங்களின் சந்திப்பு. ஆயுள் சந்தா என்கி றது - பழுத்து தொங்கும் பழமா? ஒன்றும் பெயர வில்லை. இன்று அரியலூர், திருமழப்பாடி, திருமா னூர் - இரவு இரும்புலிக் குறிச்சி தங்கல் திட்டம்.

### காரில் பயணம்

காலை 10 மணி. ஒரு நாளில் பஸ்ஸில் இதெல் லாம் பார்க்க முடியாது என்று டாக்டர் ஒரு டேக்ஸி ஏற்பாடு செய்து விட்டார். டிரைவர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை. வி.அய்.ப்பி-களுக்கு மட்டும் ஓட்டுவாராம். ஊர் சுற்றப் போனால் ஓட்டல் வாடகை எதுக்கு? எல்லாம் அள்ளி காரில் போட்டுக் கொண்டு அரியலூர் கிளம்பினேன்.

### அறிவுடைநம்பி

பெரியார் ஸ்டோரில் தோழர் அறிவுடைநம்பி! ஆ.செ. தங்கவேலு இருந்து சிம்ம கர்ஜனை புரிந்த குகை. அய்யா தங்கவேலுவின் அரும்பணி - சின்ன குழந்தையைக் கேட்டாலும் பெரியார் ஸ்டோர்ஸ் (கடை) பெரியார் இல்லம் (வீடு) காட்டுகிறார்கள். வீட்டுக்குச் சென்று ஆ.செ.வின் துணைவியார் — மருமகள் — பேத்தி (ஓகோ, இந்தப் பெண் திருமழப் பாடி பேராசிரியர் ஆறுமுகத்தின் மருமகள் கூடவா?) எல்லாரையும் பார்த்துப் பேசிவிட்டு கடைக்குத் திரும்பி ''சந்தா சமாச்சாரம்'' என்றேன், அறிவுடை நம்பியிடம். ரொம்ப பிசி அவர். எல்லாம் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் வியாபாரம், மக்கள் அவரைப் பிய்த் துப் பிடுங்கி எடுத்தார்கள். பரவாயில்லை - வணிகம் கொஞ்சம் சூடு பிடித்திருக்கிறது என்ற மகிழ்ச்சி. அடுத்த முறை கட்டாயம் கூட வந்து ஆட்களை சந்திக்க உதவுவதாகச் சொன்னார் (பின்னே நீ பாட் டுக்கு பொசுக்குன்னு வந்து நின்னா? சரி. அடுத்த முறை கொடுங்கன்னு சொல்ல வந்தா இருக்கட் டுமே.)

### பழம் உதிர்சோலை

திருமழப்பாடி செல்லும் வழியில் சாலையில் அடர்த்தியான மரங்கள். ராஜா காலத்து மரங்களாம். சாலையும் அப்படியே. கார் குதித்து குதித்து முன்னே றியது. டிரைவர் வாழ்ந்த கதை கெட்ட கதைகளைச் சொல்லி சலிப்பைப் போக்கினார் (இஞ்சினீயரிங் டிப்ளமா படிச்ச ஒரே பையனை வெளியூர் வேலை வேலைக்கு அனுப்பினால் உள்ளூர் வீடு வாசல் சொத்து பத்து என்னாகும்? யாராவது பதில் சொல் லுங்கள்). எனது கிழக்கு தஞ்சை (இப்போது திருவா ரூர்) மாவட்டத்துக்குப் பிறகு சாலையில் மாமர வரிசை இங்கேதான் பார்க்கிறேன் (நடந்து களைக்கிற வன் ஒரு மாம்பிஞ்சு ஒடிச்சு வாயில் போடலாமில் லையா?)

### அய்யா ஆறுமுகனார்

அய்யா ஆறுமுகனாருக்கும் அதே பிரச்னை - சங்கமித்ரா வருகையை நம்புவதா, இல்லையா? பேசி னோம். சிரித்தோம். டிரைவர் சகிதம் சாப்பிட்டோம். ஒரு மாதத்துக்குள் அய்ந்து ஆயுள் சந்தா (ரூ.2500) எப்படியும் சேர்த்து விடுவதாக உறுதி அளித்தார். அசாமில் வேலை செய்யும் இவர் மகனும் சில சந்தாக்களைச் சேர்த்துத் தருவதாகச் சொன்னார். 'என் னையே நான்' -ல் (பேராசிரியர் ஆறுமுகத்தின் தன் வரலாறு) மனைவி பெயரை ஒரு இடத்தில் கூடச் சொல்லவில்லை என்று இவரை நான் இரண்டு வாங்கு வாங்கின பிறகு, இப்போது எல்லா இடத்தி லும் அதே வேலையாக இருக்கிறார் என்று நினைக்கி றேன். வீட்டில் மகிழ்ச்சி என்பது பெண்களின் கையில்தான் இருக்கிறது என்பதைக் கண்கூடாக - மன நிறைவோடு பார்த்தேன். மாலை மணி $3^1/_2$. வீதிக்கும் வீதிக்குமான வீட்டில் - கூடத்தில் சமையல் நடப்பது - பேராசிரியர் வீட்டில் மட்டுமாகத்தான் இருக்கும். படிப்பறை, சயன அறை எல்லாம் மகிழ்ச்சியு டன் சுற்றிக் காட்டினார். அணு அணுவாக வளர்ந்த இமயமலை ஆறுமுகம் என்பது என் கருத்து. விடை பெற்றோம்.

படிப்பகம்

www.padippakam.com



**அரிகா. பிச்சை**

திருமானூர் பிரமுகர் - அரிகா பிச்சை (வாக்குமூலம் -தன் வரலாற்று நாயகர்) பிராணிவள மேம்பாட்டுத் துறையில் உதவி இயக்குநராகப் பதவி ஒய்வு பெற்றவர். இவருடைய முதல் வேண்டுகோளே - என்னை மா.பெ.பொ.க. -வில் சேர்த்துக் கொண்டு பொதுக்குழு - செயற்குழு அறிக்கைகளை எனக்கு அனுப்பினால் நானும் உங்களுக்குப் பயன்பட மாட்டேனா? (தோழர் வே. ஆனைமுத்து கவனிப்பாராக!) வாருங்கள் பிச்சை சார் - உங்களை மாதிரி மனித நேயமும் மக்கள் - தொண்டார்வமும் கொண்டவர்களை நாங்கள் தேடிக் கொண்டிருக்கிறோம். டாக்டர் பிச்சையுடன் அன்றொருநாள் - கொள்ளிடத்தில் இரவில் குளித்தது - உண்வருந்தியது - எல்லாம் இனிய நினைவுகள். இரண்டு ஆயுள் சந்தா - உடனடியாகவும், போகப் போக இன்னும் அதிகமாகச் செய்யவும் வாக்களித்தார்.

**இரும்புலிக்குறிச்சி**

மாலை 6 மணி அளவில் 24.2.99 இரும்புலிக்குறிச்சி அடைந்தோம். சிகோ - என்றால் எல்லாரும் முகவரி சொல்லுகிறார்கள். அரியலூரில் எனது சந்திப்பைத் தவறவிட்ட சிகோ - வீட்டு வாசலில் காத்து இருக்கிறார். என்னை இறக்கி விட்டு கார் போய் விட்டது. பங்களாவும் - வட்டித் தொழிலுமாக ஆசிரிய சமூகம் பரிணாமம் அடைந்து விட்ட 1999-ல் கூரைக்குடிசையில் சிகோ! டீ சாப்பிட்டவுடன் ''ஊர் வலம்'' தொடங்கியது.

**இரவு 10 மணிக்கு வகுப்பு**

வாலாசா வல்லவன் பயணத்தில் வாக்குறுதி தந்திருந்த 'செல்வி ஸ்டோர்ஸ்' உத்திராபதி 'டபக்' கென்று ரூ.500 எடுத்து என் கையில் திணித்தார். பெரியாரின் அந்த பொற்காலம் போனதே என்கிற துயரம் உத்திராபதியாரின் ஒவ்வொரு வார்த்தையிலும்! எல்லாருமாக மெல்ல ஊர் கோடிக்கு வந்த போது — பள்ளிக்கூடத்தில் (விளக்கு வீடு வசதி இல்லா) மாணவர்கள் படிப்பதைப் பார்க்கலாம் என்றார். அட! இந்த இரவு 10 மணிக்கு - 10 வகுப்பில் 40-ம், 12-ம் வகுப்பில் 20 மாக - 60 பேர்! உடனே ஒரு வகுப்பு எடுத்தேன் - மிகவும் எளிது தேர்வுகளில் வெற்றி பெறுவது!

**வருக இளைஞரே!**

சிகோவின் செல்வமகன் மார்க்சிய ஒளி (அடடா, இப்படிக் கூடப் பெயர் இருக்குமா?) வெற்றிகரமாகத் தனது கம்ப்யூட்டர் படிப்பை முடிக்க இருக்கிறார். பேசிப் பார்த்ததில் நல்ல தெளிவும் துணிவும் இருப்பது தெரிந்தது. வாங்க தம்பி, வரலாறு படைக்க. கிராமத்து இளைஞன் APJ அப்துல் கலாம் கதைதான் உங்களுக்குத் தெரியுமே! எட்டிப்பிடித்தால் இமய மலை கைக்குள்ளேதான்.

**அதிகாலை - ஊர்வலம் 25.2.99**

முந்திரிக் காட்டில் அதிகாலைக் கடன் முடிந்து டீ சாப்பிட்டு 7 மணிக்கெல்லாம் நாங்கள் தயார். வந்து விட்டார்கள் - சி.பி.எஸ். அறிவொளி, உத்திராபதி, இன்னும் பலர். ஆயுள் ஆயுள் சந்தா சந்தா. ஒருவகை புதுநிலை பஜனைதான். வல்லவனிடம் தந்த வாக்குறுதிப்படி ராஜமாணிக்கம் ரூ.500 வரவு. புது வாக்குறுதிகள் சில. ரூ.5000 இல்லாமல் இரும்புலிக் குறிச்சியை விட்டு அகலமாட்டேன் என்றேன். மே வரட்டும் - முந்திரி பழுக்கட்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

**செந்துறைக்குப் பயணம்**

அறிவொளி பின் தொடர செந்துறைக்குப் பயணமானோம். டாக்டர் தனித்தமிழ்க் கொற்றன் ஊரில் இல்லை. தோழர் பொன். ராசமாணிக்கம் தாத்தையங்கார் பேட்டையில். கிடைத்தவர்கள் அரங்க இளவரசனும், பாண்டியனும் தான். இன்னொரு முறை வரும் போது கட்டாயம் பல ஆயுள் சந்தாக்களைக் கையில் வைப்போம்' என்றார்கள். மாநாட்டு வசூல் - விளம்பர வசூல் - கொஞ்சம் கை களைத்த நேரம்தான். பிறகு என்ன? செயங்கொண்டானில் டாக்டர் காத்திருப்பாரே!

**காத்துக் கொண்டிருந்தார்**

பேருந்து பிடித்து செயங்கொண்டம் ஓடிவந்தால்- முழு நாளையும் எனக்கு ஒதுக்கக் காத்துக் கொண்டிருந்தார் டாக்டர் மாசிலாமணி. கங்கை கொண்ட சோழபுரம் கோமகன், தி.க. பிரமுகர் காம்ராஜ் என்று பலரை சந்திக்கத் திட்டம். மாலையில்தான் கோமகன் கிடைத்தார் - சேர்ந்தேன் ஆயுள் சந்தா; அனுப்பி வைக்கிறேன் பணம் என்றார். அது எப்படிப் போதும் கோமகன்? மக்கள் பணிக்கு மாதத்தில் ஒருநாள் - வருமானத்தில் 1% என்றால் இன்னும் நிறைய வர வேண்டுமே! நீங்கள் - உங்கள் உறவினர் நண்பர் - சரி. செய்கிறீர்களா. சரி, சரி.

**பெரிய அதிசயம்**

பெரிய அதிசயம் காங்கிரஸ் பெரும் புள்ளிகள் கோவிந்தராசனாரும், மாவட்டச் செயலர் புஷ்பராஜும் மனமுவந்து ஆயுள் சந்தா கட்டியதுதான். இன்னும் பலரைச் சந்திப்போம். ஏழை எளியார் துயரை விடுவிப்போம் - என்கிற தீர்மானத்துடன் இரவு 10.40-க்குப் பேருந்து ஏறினேன் சென்னைக்கு. காசு பெயர்வது கடினம் என்றாலும் - களப்பணியின் சுகம் - சுகமே.

**சங்கமித்ரா**

படிப்பகம்

www.padippakam.com



## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்!

### நீ.பெ. மணி - மு.செ. இரசியா

திருச்சி, உறையூர், சு. நீலமேகம் - பெரியக்காள் இணையர்களின் மகன் - மணி என்கிற சுப்பிரமணி; பள்ளப்பட்டி செல்லம்மாள் - முருகையன் ஆகியோரின் மகள் இரசியா ஆகியோர்க்கு 26.2.99 அன்று காலை உறையூர் எஸ்.வி. திருமண மண்டபத்தில் வே. ஆனைமுத்து தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தர்மராஜ், லத்திப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இரா.க. நாத்திகன் வரவேற்புரை வழங்கினார். சுப்ரமணியன், கோபி ஜனார்த்தனன், நாத்திக கருணாகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தங்கராசு நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

### பகுத்தறிவு - சுமதி

சேலம் மாவட்டம் வாழப்பாடி பெரியார் பெருந் தொண்டர் வி.கே.வி. குமார் அவர்களது பேரனும் வி. சுகுமார் அவர்களது மகனுமான பகுத்தறிவு — வாழப்பாடி வா.பெ. வீரமுத்து அவர்களது மகளான வி.சுமதி ஆகியோரின் வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா, தி.க. பொதுச்செயலாளர் கி. வீரமணி தலைமையில் சேலம் மத்திய கூட்டுறவு வங்கி திருமண மண்டபத்தில் சனவரி 24 ஞாயிறன்று காலை 9.00 மணிக்கு நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்தோரை வி. சுகுமார் வரவேற்றுப் பேசினார். மணமக்களை வாழ்த்தி டாக்டர் மே.து. ராசுகுமார் (சென்னை), பேராசிரியர் பூ.சி. இளங்கோவன், பொத்தனூர் க. சண்முகம், பழனி புள்ளையண்ணன், புலவர் அண்ணாமலை, பாப்பிரெட்டிபட்டி வி.ஆர். வேங்கன், அருள், ஆ. வந்தியத்தேவன், பி.என். குணசேகரன் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக சு. கவுதமன் நன்றியுரை கூறினார்.

### மாதவன் - கீதா

திருச்சி - காட்டூர் கைலாசு நகரில், தந்தை பெரியார் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட இணையர்கள் பி.இர. மாதவன் - ம.சுப. கீதா ஆகியோர் 28.2.99 காலை 10 மணி அளவில் 'பரத்' திருமண மண்டபத்தில் தோழர் ந. முத்துநிலவன் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

வளர்ச்சி நிதியாக பி.இர. அரசெழிலன் ரூபாய் 50.00 அளித்துள்ளார்.

## அந்த விடியலில் தான்...!

*அந்த விடியலில் தான்*
*என்*
*உயிர்மூச்சு அடக்கம்!*
*காதலிக்காய்க் காத்திருப்பது*
*எவ்வளவு சுகமோ அதேபோல்தான்*
*எனக்கு அந்த விடியலுக்காய்க்*
*காத்திருப்பதும்!*

*என்று வரும்*
*என் செவிகளுக்கு*
*தென் திசையிலிருந்து தென்றலாய்*
*அந்த இனிய செய்தி?*

*கிழக்கினில் உதயமாகும்*
*சூரியன் என்று*
*தருவான் விடியலை*
*என் தமிழீழத்திற்கு?*

*அந்த விடியலில் தான்*
*என் உயிர்மூச்சு*
*ஊன்*
*சுவாசம்*
*உறக்கம்*
*சுதந்தரம் இன்னும்...*
*எல்லாமே!*

ப.ம. அதியமான்
திட்டக்குடி

## அம்பேத்கருக்கு ஆலயம்!

இந்தியாவில் தலைவர்களுக்கு நினைவிடம், மணிமண்டபம், சிலைகள் அமைக்கப்பட்டுள் ளன. ஆனால் இதுவரை காந்தியாரை தவிர வேறு யாருக்கும் கோயில் கட்டியதாகத் தெரியவில்லை.

இந்தியாவில் முதன் முறையாக 'பாபாசாகேப்' அம்பேத்கருக்கு 'பீம் பகவான் ஆலயம்' தமிழ் நாட்டில் மதுராந்தகம் அருகில் கட்டப்பட்டு வருகிறது. இதற்கான பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்தக் கோயிலில் வழக்கமான பூஜைகள் நடக்கும். புத்தரின் 22 கட்டளைகள் எழுதப்பட்டிருக்கும். 22 திருத் தொண்டர்கள் 'பீம் சேவக்' என்ற பெயரில் பணிபுரிவார்கள். கோயில் அகில இந்திய அம்பேத்கர் மக்கள் இயக்கம் என்ற இயக்கத்தின் பெயரில் கட்டப்பட்டு வருகிறது. இது கண்டிக்கத்தக்கது. — கோ. அருண்மொழி

படிப்பகம்

www.padippakam.com



# அமைப்புசாராத் தொழிலாளர் வாரியம்

அமைப்பு சார்ந்து திரட்டப்படாத தொழிலாளர்க்கென வாரியம் அமைப்பதற்கான ஆணை 8.3.99 அன்று தமிழக அரசினரால் வெளியிடப்பட்டது. 53 வகையான தொழில்கள் செய்பவர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர முடியும்.

**தகுதி:** 18 வயது முடிவடைந்த 60 வயதுக்கு உட்பட்ட தொழிலாளர்கள்.

**கட்டணம்:** மாதந்தோறும் ரூ.20 செலுத்த வேண்டும். தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துபவர்களும் ரூ.20 செலுத்த வேண்டும்.

**சலுகைகள்:**

1) 60 வயது பூர்த்தியடைந்த பிறகு அவர் செலுத்திய தொகையுடன் ஆண்டுக்கு 12 விழுக்காடு கூட்டு வட்டி, அவர் செலுத்திய தொகையில் 25 விழுக்காடு ஆகியவை சேர்த்து வழங்கப்படும்.

2) தொழிலாளர்கள் பணிக்காலத்தில் விபத்தில் இறந்தாலோ, இரண்டு கை, கால்கள் இழப்பு, கண் பார்வை இழப்பு போன்றவற்றுக்கு ரூ.1 லட்சம் நட்டஈடு வழங்கப்படும். ஒரு கை, ஒரு கால், ஒரு கண்பார்வை இழப்புக்கு ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். காயங்கள் மூலம் ஏற்படும் இழப்புகளுக்கு ரூ.25 ஆயிரம் வழங்கப்படும்.

3) பெண் தொழிலாளர்களுக்குக் கருச் சிதைவு ஏற்பட்டால் ரூ.500 வழங்கப்படும். குழந்தை பிறந்தால் ரூ.1000 வழங்கப்படும்.

**உறுப்பினராக நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

உறுப்பினராக விரும்புபவர்கள் விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட 3 பேரில் யாராவது ஒருவரிடமிருந்து சான்றிதழ் பெற்று வர வேண்டும்.

1) சட்ட விதிமுறைகளில் குறிப்பிட்ட பணிகளுக்குத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துபவர்கள்

(அல்லது)

2) பதிவு பெற்ற தொழிற் சங்கச் செயலர் (அல்லது)

3) துணைக் கண்காணிப்பாளர் தகுதியில் உள்ள தொழிலாளர் துறை அதிகாரி (அல்லது) தொழிற்சாலை துணைக் கண்காணிப்பாளர்.

உறுப்பினராகச் சேர்ந்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும். உறுப்பினராகி 12 மாதங்கள் பணம் செலுத்தியவர்களுக்கு மேற்கண்ட சலுகைகள் கிடைக்கும்.

## 53 வகையான தொழில்கள்

1) வாகனம் பழுது நீக்கும் தொழிலாளர்கள்
2) அப்பளத் தொழிலாளர்கள்
3) அழுக்கு நீக்கல் மற்றும் சாயத் தொழிலாளர்கள்
4) மாட்டு வண்டித் தொழிலாளர்கள்
5) ஓடு மற்றும் செங்கல் சூளைத் தொழிலாளர்கள்
7) சமையல் தொழிலாளர்கள்
8) தென்னை மட்டை கிழிக்கும் தொழிலாளர்கள்
9) வனப் பொருள்கள் சேகரிக்கும் தொழிலாளர்கள்
10) உணவு விடுதித் தொழிலாளர்கள்
11) முந்திரிப் பருப்புத் தொழிலாளர்கள்
12) தானி (ஆட்டோ), மற்றும் வாடகைக் கார் தொழிலாளர்கள்
13) சமையல் எரிவாயு கொண்டு செல்லும் தொழிலாளர்கள்
14) முச்சக்கர மிதிவண்டி (ரிக்ஷா) தொழிலாளர்கள்
15) பொறியியல் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்
16) தீப்பெட்டித் தொழிலாளர்கள்
17) துணிகள் தொடர்பான தொழிலாளர்கள்
18) காலணி மற்றும் தோல் பொருள் தொழிலாளர்கள்
19) சாக்குத் தொழிலாளர்கள்
20) தங்கம், வெள்ளி, நகை செய்யும் தொழிலாளர்கள்
21) கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டுத் தொழிலாளர்கள்
22) ஊதுவத்தி தயாரிக்கும் தொழிலாளர்கள்
23) சலவைத் தொழிலாளர்கள்
24) பேனா முள் செய்யும் தொழிலாளர்கள்
25) மாவு, எண்ணெய், பருப்பு, அரிசி ஆலைத் தொழிலாளர்கள்
26) அச்சுத் தொழிலாளர்கள்
27) விசைக் கைத்தறித் தொழிலாளர்கள்
28) தனியார் பாதுகாப்புத் துறைத் தொழிலாளர்கள்
29) பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்
30) பானை செய்யும் தொழிலாளர்கள்
31) காகிதம் பொறுக்கும் தொழிலாளர்கள்

படிப்பகம்

www.padippakam.com



32) அழகு நிலையம் மற்றும் முடித் திருத்தும் தொழிலாளர்கள்
33) தெருத் தெருவாகச் சென்று பொருள்களை விற்கும் தொழிலாளர்கள்
34) பாலடைக் கட்டித் தொழிலாளர்கள்
35) செயற்கைக் கற்களைப் பட்டைத் தீட்டும் தொழிலாளர்கள்
36) பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலாளர்கள்
37) கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள்
38) தையல் தொழிலாளர்கள்
39) மரம் ஏறும் தொழிலாளர்கள்
40) தகரப் பெட்டிகள் செய்யும் தொழிலாளர்கள்
41) பாத்திரங்கள் செய்யும் தொழிலாளர்கள்
42) தச்சுத் தொழிலாளர்கள்
43) சுமை தூக்கும் தொழிலாளர்கள்
44) சுமை உந்துகளில் சுமையை ஏற்றி, இறக்கும் தொழிலாளர்கள்
45) உணவுப் பொருள்களை ஏற்றி, இறக்கும் தொழிலாளர்கள்
46) உப்பளத் தொழிலாளர்கள்
47) பதநீர் இறக்கு'ம் தொழிலாளர்கள்
48) படகு, கட்டுமரம் கட்டும் தொழிலாளர்கள்
49) மரம் அறுக்கும் தொழிலாளர்கள்
50) கயிறு திரிக்கும் தொழிலாளர்கள்
51) தோல் பதனிடும் தொழிலாளர்கள்
52) கல் உடைக்கும் தொழிலாளர்கள்
53) மீன்பிடித் தொழிலாளர்கள்

# தனிமனிதன் நல்லவன்!

நாஞ்சில் ஆ. ஆரிது

மன்மதம் —
எம்மதத்துக்கும்
சம்மதமாகும் போது
என்மதமென்ன...
உன் மதமென்ன....

மதம் —
தனிமனித சுயாதீனம்!
எல்லா மதமும்
பொல்லாதவற்றை
மறுதலிக்கும் போது
என் மதமென்ன...
உன் மதமென்ன...

மதம் —
தனிமனித சுயாதீனம்!
தனிமனிதன் நல்லவன்!

சுயநலமிகளால்
உசுப்பி விடப்படும் போது
விழித்துக் கொண்டே
விழுந்து விடுகிறான்!

அப்போது —
பாதச் சுவடுகளை யல்ல
பாதங்களையே
பாதைகள் விழுங்கி விடுகின்றன

அப்போது —
வெளிச்சத்தை யல்ல
விளக்குகளையே
மனஇருள் தின்றுவிடுகிறது!

அப்போது —
இசையால் அல்ல
புல்லாங்குழல் மூங்கிலால்
காதடைத்துப் போகிறது!

அப்போது —
கத்திகள் கூர் சீவப்பட்டு
உடல்களைத் தேடுகின்றன
எழுதிப் பழக!

இந்த நிலை
மாற வேண்டும்!

அல்லது
மாற்றப்பட வேண்டும்!

அதுவரை —
நம்வீட்டு முற்றத்தில்
வாசனையை யல்ல
முள்ளை மட்டுமே அடைகாக்கும்
ரோசாப் பூக்கள்!

மன்மதம்
எம்மதத்துக்கும்
சம்மத மாகும் போது
என் மதமென்ன....
உன் மதமென்ன....

படிப்பகம்

www.padippakam.com



# காந்தியார் மாற்றமும், கொலையும்

ஈ.வெ.ரா.

தோழர்களே!

சுதந்தரம் வந்துவிட்டதாக விளம்பரப்படுத்தப்பட்டு - வெள்ளையனும் போய் விட்டதாகக் கூறப்பட்ட அந்தத் தினத்திலிருந்து, காந்தியாரின் எண்ணங்களில் பல குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டு வந்ததை நான் கண்டேன். காங்கிரஸ்காரர்கள் விரும்பிய படி சுயராஜ்யம் கிடைக்குமானால், நம் சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் என்னென்ன கேடுகள் விளையக் கூடும் என்று நான் இடைவிடாது கூறிவந்தேனோ, அக் கேடுகள் விளைய நேரிட்டதை உணர்ந்து, காந்தியார் அதை ஒப்புக் கொள்ள ஆரம்பித்தார்; அக் கேடுகளையும் அனுபவிக்க ஆரம்பித்தார்; அவசரப்பட்டு சுயராஜ்யம் கேட்டது எங்கு ஆபத்தாக முடியுமோ என்று கவலைகொள்ள ஆரம்பித்தார்; தமது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்று தாம் கருதி வந்தவர்களில் பெரும்பாலோரைப் பற்றி, நான் என்ன மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டிருந்தேனோ அதே போல அவரும், அவர்களைப் பற்றிக் கொள்ள ஆரம்பித்தார்; சுருங்கக் கூற வேண்டுமானால், உண்மையை உணர ஆரம்பித்தார்; தாம் செய்த பல தவறுகளை உணர ஆரம்பித்தார்; அத் தவறுதல்களைத் திருத்திக் கொள்ளவும் ஆரம்பித்தார் என்று கூறலாம்.

அத் திருத்தங்களைச் செய்யப் புகுந் தறுவாயில், தமது எண்ணங்களுக்கேற்பச் செயலாற்ற முற்பட்ட தறுவாயில், அவரது முற்போக்கு எண்ணங்களால் தமக்குக் கேடு சூழும் என்று அஞ்சிய சுயநல சோம்பேறிக் கூட்டத்தாரால் கொலை செய்யப்பட்டார். இதுதான் நமக்கு மன வேதனையாக இருக்கிறது. அப்படிப்பட்ட துர்மரணத்திற்கு மட்டும் அவர் ஆளாகாமல் இருந்திருப்பாரேயானால், இதற்குள்ளாக இந் நாட்டில் எத்தனையோ புரட்சிகரமான காரியங்களை அவர் செய்து இருப்பார். இன்று ஏற்பட்டுள்ள கொள்ளைகள், கொடுமைகள், பல அட்டூழியங்கள், அநீதிகள் இவற்றையெல்லாம் நிறுத்தியிருப்பார்; அல்லது, அடியோடு நிறுத்த முடியாவிட்டாலும், இவற்றிற்கெல்லாம் சரியான பரிகாரமாவது தேடியிருப்பார். குற்றம் பல கண்டதால் காங்கிரஸின் அமைப்பு முறையையே மாற்றியமைக்க ஆரம்பித்தார். நமது கொள்கைகளை நேர்முகமாக ஆதரிக்கா விட்டாலும், மறைமுகமாகவாவது ஒப்புக் கொள்ள ஆரம்பித்தார்; அதுவும், மறுப்படியும் நான் அவருடைய சிஷ்யனாக ஆக வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் ஆசை கொள்ளும் அளவுக்கு ஆதரிக்க ஆரம்பித்தார். அப்படி நான் ஏங்கியிருந்த சந்தர்ப்பத்தில் அவர் கொல்லப்பட நேர்ந்ததுதான் எனக்கு அளவிடற்கரிய துக்கம் உண்டாகக் காரணமாயமைந்தது.

அவர் நமது கொள்கையை ஒப்புக் கொள்ள ஆரம்பித்தார் என்பதற்குப் பல காரணங்கள் காட்ட முடியும் என்றாலும், உதாரணமாக ஒன்றிரண்டு காரணங்களை மட்டும் இங்கு கூற ஆசைப்படுகிறேன். 'காங்கிரஸ்காரர்கள் தமது தியாகத்திற்குக் கூலி கேட்க ஆரம்பித்து விட்டனர்; பதவி வேட்டை துவங்கி விட்டனர்; காங்கிரஸ் சட்டசபை மெம்பர்கள் நீதி நிர்வாகத்தில் அடிக்கடி தலையிடுகின்றனர்' என்றெல்லாம் குற்றம் கூறினார். இதையெல்லாம் தாமாகக் கூறுவது அழகாக இருக்காதென்று கருதி, தமது நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்குமுரிய தோழர் கொண்டா வெங்கடப்பையா அவர்களால் எழுதப்பட்ட கடிதத்தை அப்படியே வெளியிட்டு, அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் யாவற்றையும் தாம் உண்மையென்றே நம்புவதாகவும், மேற்படி குற்றங்களுக்காக ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் அவமானப்பட வேண்டியது அவசியமென்றும் குறிப்பிட்டிருந்தார். இவைதான் — நான் காங்கிரஸ் பிரமுகர்களைப் பற்றி அடிக்கடி கூறி வந்த கருத்துக்களாகும்.

இங்கு திராவிடர் கழகம் வலுப்பெற்று வருவது கண்டு பொறாமை கொண்ட சில பார்ப்பனர்கள் காந்தியாரிடம் காவடி தூக்கிச் சென்றனர். தென்னாட்டில் திராவிடர் கழகம் என்றொரு கழகம் வளர்ந்து வருகிறதென்றும், அதைக் கண்டு காங்கிரஸ் மந்திரிகளே பயப்படுகிறார்கள் என்றும், காங்கிரஸ் ஆட்சியில் தம் மக்களுக்குப் பள்ளிக்கூடங்களில் படிக்க இடம் கிடைப்பது கூடக் கஷ்டமாக இருக்கிறதென்றும் கூறினார்கள். அதைக் கேட்ட காந்தியார் கூறிய பதிலில்தான், நான் கூறிய மனமாற்றம் இருக்கிறது.

கவனித்துப் பாருங்கள்; 'என்னருமை பிராமணத் தோழர்களே! நீங்கள் கடவுளோடு நேர்தொடர்பு வைத்துக் கொண்டுள்ளவர்களாயிற்றே! அதிலும் மகா புத்திசாலிகளாயிற்றே! அப்படியிருக்க, உங்களுக்கு எதற்குப் படிப்பு வேண்டும்! கடவுளை நம்பி, சதா

படிப்பகம்

www.padippakam.com



கடவுள் பணி செய்து கொண்டிருங்களேன்! படியாத முட்டாள்களான அவர்களுக்குத் (திராவிடர்களுக்கு) தானே படிப்பு அவசியம்; அவர்கள் படிக்கட்டுமே! உங்கள் பிள்ளைகளுக்கு இடமில்லாமற் போனால் வருத்தப்படாதீர்கள். உங்கள் விகிதாச்சார இடங்களைக்கூட தாழ்த்தப்பட்டவர்களுக்காக விட்டுக் கொடுத்து உதவுங்கள்' என்று அவர் கூறினார். இதைத் தானே நாமும் இன்றுவரை கூறிவந்தோம்.

எனவேதான், அவரது மறைவால் நாம் வருத்தப்பட நேரிட்டதே ஒழிய, அவரது பேரைச் சொல்லி உங்களது நன்மதிப்பைப் பெறுவதற்காக அல்ல என்பதை உங்களுக்குத் தெளிவுபடுத்தவே இவ்வளவும் கூற நேரிட்டது.

(சிதம்பரத்தில், 29.9.1948-ல் சொற்பொழிவு - 'விடுதலை' 3.10.1948)

('பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்', பக்.1031-32)

## கடவுள் என்பதும் கர்த்தனென்பதும்!

த. வேணுகோபால், தக்கோலம்

கடவுளென்பதும் கர்த்தனென்பதும்
 கலைக்குதவாத பேச்சு - அவை
கயவர்கள் கூட்டமது காசைப் பறித்திட
 கற்பனை செய்ததலாச்சு - தலை
விதி விதியென்று சதிதனை செய்து அவன்
 நாளும் வாழலாச்சு பொய்
விதி தனை நம்பிய நம்மவர் கூட்டம்
 என்றுமே நலிந்து போச்சு...

மோட்சமும் நரகமும் யாவும் உண்டென்று
 மத நம்பிக்கை யூட்டிட்டான் பார்ப்பான் - இந்த
நாளும் கிழமையும் இராசிபலன் சொல்லி
 நய வஞ்சகமாக ஏய்த்தான்
சூத்திரன் படித்தால் வேதனை தருமென்று
 நஞ்சினை நமக்குள் பாய்த்தான்
நம்முன் சாத்திரம் பேசி சகலமும் கூறி
 சிந்தனை அறிவைக் கெடுத்தான்
தலையெழுத்துப் போல் எல்லாம் நடக்குமென
 தத்துவம் பேசி அறிவைக் கெடுத்தான்
கலையென்று கூறிக் கண்ணியமில்லா
 கதைகளை நம் முன் வைத்தான்
சிலைகளைச் செதுக்கி கோயில்கள் கட்டி
 செப்படி வித்தைகள் படைத்தான் அவன்
பலவிதமான ஆசைகள் காட்டி
 பழந்தமிழ் மக்களை ஏய்த்தான்
கடவுள் கதையென இராமாயணத்தைக்
 கற்பனை செய்தான் கம்பன் — அந்த
கற்பனைக் கடவுளுக்குக்கோயில் கட்டி அதைக்
 கும்பிட வைத்தான் வம்பன்
சிந்தனைத் தெளிவும் சிறிது மில்லா மக்கள்
 செம்மறிக் கூட்டமானார் — இங்கு
இந்நிலை மக்கள் இழிவு நீங்கிட
 சிந்தனை செய்தவர் பெரியார்.

சித்த மருத்துவம்

## நஞ்சு

1. ஆடுதின்னாப்பாளை இலைச்சூரணம் 2 கிராம் வெந்நீரில் கொடுத்து வரத் தீரும்.

2. ஆடுதின்னாப்பாளை வேரை அரைத்துக் காலை மாலை 5 கிராம் கொடுத்துக் கடும்பத்தியத்தில் வைக்க (புதுப்பானையில் சமைத்த உப்பில்லாத பச்சரிசிப் பொங்கல் கொடுத்து 24 மணி நேரம் தூங்க விடக் கூடாது) 3 நாளில் அனைத்து வகைப் பாம்பு நஞ்சும் தீரும்.

3. தும்பைச்சாறு 25 மி.லி. பாம்பு தீண்டியவருக்குக் கொடுக்க 2, 3 தடவை பேதியாகும். கபத்துடன் வாந்தியாகும். குளிர்ந்த உடல் சூட்டையும். புதுப்பானையில் பச்சரிசி பாசிப்பயிறு பொங்கி உப்பில்லாது சாப்பிட வேண்டும். ஒரு நாள் உறங்கக் கூடாது. 3 நாள் உப்பில்லாமல் பொங்கல் கொடுத்து வரத் தீரும். மங்கிய நிலையில் இருப்பின் சாற்றினை நசியமிடலாம். நசியத்தில் தெளியவில்லையெனில் மரணம் உறுதி.

4. எருக்கு இலையை அரைத்துப் புன்னைக்காயளவு பாம்பு கடித்தவருக்கு உடனே கொடுக்கலாம்.

5. அவுரி வேர் 20 கிராம் அருகம்புல் 30 கிராம், மிளகு 9 மையாய் அரைத்துப் புன்னைக்காயளவு 3 வேளை சாப்பிட்டு இச்சாப் பத்தியம் இருக்கத் (உப்பு, புளி, காரம் நீக்கி 6 நாள் உணவு கொள்க) தீரும்.

தொகுப்பு: கோ. அருண்மொழி

(தொடரும்)

### பூச்சிக் கொல்லியா? உயிர்க் கொல்லியா?

உலகின் தென்பகுதியில் பூச்சிக் கொல்லிகளின் நச்சுத்தன்மையால் 50 இலட்சம் பேரும், தரக்குறைவான எரிபொருளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் உட்புற (வீட்டு) காற்று மாசடைவதால் 30 இலட்சம் பேரும் ஆண்டுதோறும் கொல்லப்படுகின்றனர் என்கிறார் உலக வள நிறுவனத்தின் துணை இயக்குநர் டாக்டர். ஏ.கரீம் அகமது.

நன்றி: நிலவளம், செப்.98

படிப்பகம்

www.padippakam.com



## படத் திறப்பு விழா!

மா.பெ.பொ. கட்சியின் காஞ்சிபுரம் நகரக் கிளைச் செயலாளர் கு. ஏகாம்பரம் அவர்களின் தாயார் கு. இராசம்மாள் 18.2.99 அன்று மறைவுற்றார். கு. ஏகாம்பரம் அவர்களின் பெற்றோர் கு. இராசம்மாள் - மு. குழந்தைவேல் ஆகியோரின் படத்திறப்பு விழா 1.3.99 அன்று காஞ்சிபுரத்தில் உள்ள அவர் தம் இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு வே. ஆனை முத்து தலைமை தாங்கினார். மு. செயப்பிரகாசு முன்னிலை வகித்தார். ஏ. செல்வி வரவேற்புரை வழங்கினார். காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கிப் பொது மேலாளர் கஜராஜன் படங்களைத் திறந்து வைத்தார். தமிழேந்தி, டாக்டர் விமுனா மூர்த்தி, திருச்சி சோமசுந்தரம், ச. யோகநாதன், நாத்திகம் நாகராசன், பவனந்தி, மானாமதுரை சேதுராமன், க. கோதண்டம், சி. நடராசன் ஆகியோர் மறைந்த பெரிய வர்களின் பணிகளை நினைவு கூர்ந்தனர். இறுதியில் கு. ஏகாம்பரம் நன்றி நவின்றார்.

## போதும் உன் திருவிளையாடல்

— இசையமுது

'பாரத தேவி'!
உன்...
பசியடங்கியதா?

சமூகசேவகர் 'ஸ்டெயின்சும்'
தளிர் அவர்தம் மலர்கள் இரண்டும்
சாம்பலான பின்னால்...!

மனிதநேயத்தை எரிப்பதும்
மசூதியை இடிப்பதுமே
உன்
மதக்கொள்கை என்றால்
உன்
மண்ணே மலடாகிப்போகும்

எங்களுக்குத் தெரியும்
'பஜ்ரங்தள்!' 'ஆர்.எஸ்.எஸ்.'
'பி.ஜே.பி.' முகங்களை!

இந்த
மதவாதக் கயிறுகளால்
உனக்கு
மரணம் நிச்சயம்!

மடியில் அணுகுண்டு
உதட்டில் ஒருமைப்பாடா?
தேவி... போதும் உன்
திருவிளையாடல்!

## கோவையில் திராவிடர் கழகம் இரயில் மறியல் 70 தோழர்கள் கைது!

கர்நாடகாவில் உள்ள தலைமைக் கணக்காய்வாளர் அலுவலகத்தில் (ஏ.ஜி.அலுவலகம்) 60 தமிழர்களின் நியமன உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தமிழர்கள் என்பதே அதற்குக் காரணம். கர்நாடகத்தில் தமிழர்களின் வேலை வாய்ப்பைப் பறித்த மத்திய அரசையும், கர்நாடக அரசையும் கண்டித்து கோவையிலிருந்து பெங்களூர் இண்டர் சிட்டி போராட்டத்தை திராவிடர் கழகம் அறிவித்திருந்தது. அதன்படி 17.2.98 அன்று காலை 11 மணிக்கு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் அரசு விரைவுப் பேருந்து நிலையம் முன்பிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட போது தடுத்து நிறுத்தப்பட்டு, 70 தோழர்களையும் காவல்துறை கைது செய்து, காவலர் பயிற்சிப் பள்ளி வளாகத்தில் அடைத்து வைத்து மாலையில் விடுவிக்கப்பட்டார்கள். கைதான தோழர்கள்: திராவிடர் கழகத் தலைமை நிலையச் செயலாளர் வெ. ஆறுச்சாமி, தமிழ் அறிவியக்கத்தின் செயலாளர் பூ.வே. தமிழன்பன், ஆதித் தமிழர் பேரவை மாநிலச் செயலாளர் சி. குப்புராசு, மாவட்டச் செயலாளர் இரவிக்குமார், மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் இரா. மனோகரன், செயலாளர் கா. கருமலையப்பன், பொருளாளர் ஆழியார் நாச்சிமுத்து, மாவட்டத் துணைச் செயலாளர் மா. திருமூர்த்தி, மாநில அமைப்பாளர் பா. சாந்தகுமார், திருப்பூர் நகரச் செயலாளர் இல. அங்ககுமார், மாநகர தி.க. செயலாளர் சண்.முத்துக்குமார், பருதி கழகச் செயலாளர்கள் கா. சோமசுந்தரம், பூங்கா பாண்டியன், செயக்குமார், தி.க. சண்முகம், 'மனித சக்தி' மனோகரன், போ. சண்முகம், தி.க. குழந்தைராசு மற்றும் தோழர்கள் கைதானார்கள்.

செய்தி: சா. கதிரவன்

## தமிழக ஊரகப் பகுதியில் வேலையில்லாதோர் 4 இலட்சம் பேர்

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதியில் வேலை வாய்ப்பு இல்லாதவர்கள் எண்ணிக்கை 4 இலட்சத்து 5 ஆயிரம் பேர்.

1993-94 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி நம் நாட்டில் ஊரகப்பகுதியில் வேலை வாய்ப்பு இல்லாதோர் எண்ணிக்கை 47 இலட்சத்து 12 ஆயிரம் பேர். கேரளத்தில் 7 இலட்சத்து 47 ஆயிரம் பேர். மேற்குவங்கத்தில் 5 இலட்சத்து 17 ஆயிரம் பேர். அசாமில் 5 இலட்சத்து 2 ஆயிரம் பேர். உத்தரப் பிரதேசத்தில் 4 இலட்சத்து 10 ஆயிரம் பேர். மற்ற மாநிலங்களில் இந்த எண்ணிக்கை 2 ஆயிரம் முதல் 2 இலட்சத்து 87 ஆயிரம் வரை உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - ஏப்ரல் 1999

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ.இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 30.00 |
| இரா.பத்மநாபன் | சென்னை | 25.00 |
| க.கலைமணி | " | 50.00 |
| க.மணியரசன் | சென்னை | 50.00 |
| ப.கா.முத்துமணி | " | 50.00 |
| ப.கா.புகழ் | " | 50.00 |
| வ.அருவி வ.அரிமா | " | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | " | 20.00 |
| ப.இளங்கோவன் | " | 25.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | " | 10.00 |
| முத்து அ.அறிவுக்கடல் | " | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | " | 50.00 |
| ஆ.ஆதிசக்தி | " | 50.00 |
| க.குப்புசாமி | " | 50.00 |
| ப.வெ.முனுசாமி | " | 10.00 |
| ஜெ.அய்.ஏ. காந்தி | எரும்பி | 10.00 |
| நா.பகுத்தறிவு | அரக்கோணம் | 25.00 |
| அ.முகமதுகனி | பாகனேரி | 20.00 |
| ந.கருணாகரன் | திருச்சி | 10.00 |
| க. விடுதலைத் தமிழன் | " | 10.00 |
| இசையமுது | வேலூர் | 100.00 |
| சிகோ | இரும்புலிக்குறிச்சி | 100.00 |
| லோ.இரா.குமார் | சென்னை | 200.00 |
| சி.ப.ச.அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| வள்ளிவிசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| டி.பி. முனியசாமி | திருச்சி | 100.00 |
| கோ. இளங்கோவன் | கொள்ளிடம் | 100.00 |
| அ.மா. சுந்தரேசன் | காட்பாடி | 50.00 |
| என். குருநாதன் | வடக்கலூர் | 40.00 |
| சோ. ரெங்கநாதன் - க.ஆனந்தி மணவிழா அன்பளிப்பு | | 50.00 |
| பி. இரெ.மாதவன் - கீதா திருமண மகிழ்வாக | திருச்சி | 50.00 |
| நீ.பெ.மணி - மு.செ. இரசியா திருமண மகிழ்வாக | திருச்சி | 100.00 |

## மா.பெ.பொ.க. வளர்ச்சிநிதி

| | | |
|---|---|---|
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| வ.சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |

## அரக்கோணம் பு.க.க.இ. மன்றத்தின் மாதம் ஒரு நிகழ்ச்சி

அரக்கோணம் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் சார்பில் மாதம் ஓர் இலக்கிய நிகழ்ச்சி 27.2.99 அன்று மாலை வள்ளுவர் கல்வி மையத்தில் நடைபெற்றது. சி. திருஞானம் தலைமை ஏற்க த. சித்தர்வேள் வரவேற்புரையாற்றினார். கவிஞர் தமிழேந்தியின் அறிமுக உரைக்குப் பின் 'சங்கம் காட்டும் தமிழர் சால்பு' என்னும் பொருளில் புலவர் கி.த. பச்சையப்பன் உரை நிகழ்த்தினார். ந. நாகராசன் நன்றி நவிலலுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## தோழர்களுக்கும் அன்பர்களுக்கும் முக்கிய வேண்டுகோள்!

'சிந்தனையாளன்' பொங்கல் சிறப்பு மலர் 2.1.99இல் வெளியிடப் பெற்றது.

விளம்பரம் அளித்த வணிகப் பெருமக்கள், மலருக்கு முன் பதிவு செய்தவர்கள், கட்டுரையாளர்கள் ஆகிய அனைவர்க்கும் 23.1.99-க்குள் 'மலர்' அனுப்பப் பட்டுவிட்டது.

ஆயினும், விளம்பரம் தந்து உதவியவர்கள் மற்றும் விளம்பரம் பெற்றுத் தந்த தோழர்களிடமிருந்து ஒரு பெருந்தொகை இன்றுவரை நிலுவையாக உள்ளது.

அன்பு கூர்ந்து, மலர் விளம்பரத் தொகையினை எப்படியும், 10.4.99-க்குள் முழுவதுமாகத் திரட்டி விடுத்து உதவ வேண்டுகிறேன். நன்றி.

தோழமையுள்ள,
வே. ஆனைமுத்து

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-5. அச்சுக்கோப்பு: சுமதி லேசர்ஸ், சென்னை-6. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62.

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP C290
Registrar of News Papers of India under licence No. 24452/74 'Sinthanaiyalan TN/MS(c) 931/1998



# புரட்சியினை வழிநடத்தும் கொள்கை



தமிழேந்தி

பேரறிவர் அம்பேத்கர் பாவேந் தர்தாம்
    பிறந்திட்ட மாதமிது; நமைப் பிரித்த
ஆரியத்தின் வேரறுக்க மக்கள் தம்மை
    அணிசேர்த்த போர்மறவர் ஒருத்தர்;பாடல்
கூர்ஈட்டி யால்பழமைக் குடல்ச ரித்த
    கொள்கைப்பா முரசந்தான் மற்றொ ருத்தர்
போர்நாட்டி வரலாற்றில் நின்ற இந்தப்
    பெருமக்கள் புகழ்நாட்ட விழாஎ டுப்போம்!

மணக்கின்ற பூமாலை சிலைக்குச் சூடி
    மகிழ்வதுடன் மறப்போமா இந்த நாளை?
உனக்கும் எனக்கும் உள்ளே வேற்று மைகள்
    ஒருநூறு வளர்த்தவன்யார்? சாதி என்னும்
பிணக்குழியை ஊர்தோறும் வெட்டி நம்மைப்
    பிரித்தவன்யார்? அவனைவென் றெடுக்க வேண்டும்
சினத்தீயை நம்விழியில் சேர்ப்போம்; இங்கே
    சேரி-ஊர் தனித்தனிஏன்? மாற்று வோம்வா!

சதை, எலும்பு, உயிர்முற்றும் சாம்ப லாகச்
    சாகின்றார் நம்மக்கள்; பீகார் மண்ணே
புதைகுழியால் நிரம்புவதா? வாக்கு வேட்டைப்
    புல்லர்இங்குப் புலம்புவதா? நீலிக் கண்ணீர்
சிதைநெருப்பில் வெந்தவரை மீட்டு வந்தா
    சேர்க்குமிங்கு? சேர்க்காது! தீர்வு என்ன?
உதைகொடுத்துத் தண்டிக்கும் ஆற்ற லுள்ள
    ஒன்றுபட்ட இனமாக நிமிரு வோம்வா!

'ஒருதேசம் ஒருமக்கள் ஒருபண் பாடு'
    ஒழிந்தேநாம் அழியத்தான் இக்கூப் பாடு
இரையாக வேண்டாம்நாம்; தமிழ்த்தே சிய
    இனம்சார்ந்த மக்கள்நாம்; தமிழ்நம் செல்வம்
சுருகெல்லாம் தாமாக உதிரும்; இங்கே
    சாதியற்ற தமிழ்த்தேசம் மலரும்; அந்தப்
புரட்சியினை வழிநடத்த அண்ணல் கொள்கை
    புரட்சிக்கவி ஞன்கொள்கை உயர்த்து வோம்வா!

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 600 005. தொ.பே.எண். 8522862

படிப்பகம்